ஞானசம்பந்தம்

லர் 10]   கரஹூ வைகாசிமீ 10—6—51.   [இதழ் 7.

அன்புமிக உண்டாய அதிலே விவேகமுண்டாய்த்
துன்ப வினையைத் துடைப்பதுண்டாய்— இன்பம்
தரும்பூ ரணத்துக்கே தாகமுண்டாய் ஓடி
வருங்கா ரணர்க்குண்மை வை.

தருமபுர ஆதீன ஸ்தாபகர்,
ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர் : ச. தண்டபாணி தேசிகர்.
தருமபுர ஆதீனப்

மாயூரத்தில் பொதுஜனக் குடிதண்ணீர் வசதி.

26—5—51 சனிக்கிழமை தருமபுர ஆதீன ஸ்தாபகர் குரு ஞானசம்பந்த சுவாமிகள் குருபூஜை விழாவன்று, மாயூரத்தில் கட்டப்பெற்றுள்ள பெண்கள் இலவச மருத்துவ நிலையத்தில் பொதுஜனக் குடிதண்ணீர் வசதிக்காக 25-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்களால் மின்சாரத் தாம்இயங்கித் தண்ணீர்க்குழாய் அமைக்கப்பெற்றது. அதனைத் திருப்பணந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திறந்துவைத்தார்கள். அப்பொழுது ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பசுதருமம் பதிதருமத்திற்கு அடிப்படையாதலின் அதனையும் பதிதருமம் செய்கின்ற நாம் ஒல்லும்வகையில் செய்யவேண்டியது அவசியம் என்றும், அந்தப் பணிவகையில் இதுவும் ஒன்று என்றும், அதனைத்திறந்துவைக்கும்பேறு ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகளுக்கு உரியது என்றும் பேசிப் பணித்தார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்கள் 'தாகம் எல்லார்க்கும் பொது. ஞானதாகம் உயிரைப்பற்றி இருப்பது. தண்ணீர்த்தாகம் உடலைப்பற்றியது. ஞானதாகத்தைத் தணிக்கவந்த ஞானபீடங்கள் கருணைத் திருவுள்ளத்துடன் அதன் அடிப்படையாகிய உடல்தாகத்தையும் நீக்குவது சிறப்புடையதாகலின் இதனைத் திறந்துவைக்கிறேன்' எனக்கூறி,

பாரவன்காண் பாரதனில் பயிரா னான்காண்
பயிர்வளர்க்கும் துளியவன்காண் துளியில் நின்ற
நீரவன்காண் நீர்சடைமேல் நிகழ்வித் தான்காண்
நிலவேந்தர் பரிசாக நினைவுற்றோங்கும்
பேரவன்காண் பிறையெயிற்று வெள்ளைப் பன்றி
பிரியாது பலநாளும் வழிபட்டேத்தும்
சீரவன்காண் சீருடைய தேவர்க்கெல்லாம்
சிவனவன்காண் சிவபுரத்தெம் செல்வன் றானே.

என்றபாடலைக் கேட்போர் மனம் உருகும்படிப்பாடி முடித்தார்கள். வந்திருந்த நகரப் பெருமக்கள் அனைவர்க்கும் சிற்றுண்டி வழங்கப்பெற்றது. சந்தன தாம்பூலம் அளிக்கப்பெற்றது.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

ஞானசம்பந்தர்

மலர் 10] கரஆ வைகாசீ 10—6—51. [இதழ் 7

பொன்றயங் கிலங்கொளிந லங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

குருபூஜை விழாவில் : : :

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் பன்னாட்களாக, எந்நாட்டவரும் சிந்தையிற்கொண்டு வந்தனைசெய்து வாழ்த்துதற்கு ஏற்ற அரும்பெரும் பணிகளை, அல்லும் பகலும் ஆற்றி வருகின்றன என்பது சைவ உலகத்திற்கும் தமிழுலகத்திற்கும் ஏன் - அரசியல் உலகிற்கும் நன்கு தெரியும். சித்திரை முதல் வைகாசி முடிவதற்குள் எத்தனை திருமுறைத்திருநாட்கள்; எத்தனைப் புத்தக வெளியீடுகள்; எத்தனை அறச்செயல்கள்; அம்மம்ம! மற்றையோரால் நினைத்தற்கும் அரியதாகும். தற்போது ஞானபீடத்திலிருந்து அருளாட்சி புரியும் 25-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் ஆர்வம், "ஞாலம் நின்புகழேயாக வேண்டும் நான்மறைகளோதும் சீலமே ஆலவாயிற் சிவபெருமானே" என்று அன்று வேண்டிய ஞானசம்பந்தரைப் போன்று இன்று ஞாலம் முழுவதும், திருநெறிய

தெய்வத்தமிழும், திருவிளையாடற் புராணமும், கந்த புராணமும், இராமாயணமும, திருக்குறளும், சைவ சாத்திரங்களும் கூறுவனவற்றை யெலலாம கூர்ந்து நோக்கி ஐயந்திரிபகற்றி அறிந்துய்யவேண்டும என்பதி லேயே உளது என்பதற்கு ஐயமில்லை. அன்றியும அவர்கள்,

"காவளர்த்தும குளநதொட்டும் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக நல்கியும நானிலத்துளளோர்
யாவருக்கும் தவிராத ஈகைவினைத் துறைநின்றார்"

என்றதெய்வப்பாடலிற்பகர்ந்தவாறு ஈகைவினைத்துறை நிற்கும் ஏந்தலாகவும் விளங்குகின்றார்கள். சுருங்கக் கூறின் பசுபுண்ணியம், பதிபுண்ணியம் என்ற இரு வகைப் புண்ணியங்களையும் செய்து வருகின்றார்கள். சாத்திரமும தோத்திரமும்தான் சகல மககளுககும் உய்யுநெறியளிப்பன என்பதை உலகம் அறியச் செய்து வருகின்றார்கள்.

இத்தகைய ஞானதான வள்ளலாகிய நம் குருமகா சந்நிதானம்அவர்கள், குருஞானசம்பந்தர் குருபூஜையை யொட்டி நடைபெறும மகோதஸவததில், இவவாண்டு சீரிய முறையில் திருநெறிய தெய்வத்தமிழ மாநாடு ஒன்றை மிகச் செமமையாக நடாத்துவிததார்கள். காலத்தின் தேவையறிந்து காரியமசெய்வதில நிபுணத துவம் வாய்ந்தவர்களாதலின் இததகைய மாநா டொன்றைக கூட்டிப் பல அறிஞர்களையும அழைத் துச் சொனமாரி, கவிமாரி, இசைமாரி பொழியச் செய்தார்கள். சாத்திரத் திருநாளுககுத் திறப்புரை அருளும் வாயிலாகத் தாமும் அருளாரமுதத்தை வாரி வழங்கினார்கள். வாரிவாரி விழுங்கினர் வந்திருந் தோர்கள்.

திருமுறைத்திருநாள் :

18—5—51 வெள்ளியன்று மாலை மாநாடு தொடங்கிற்று. திவான்பகதூர் திருவாளர் T. M. நாராயணசாமி பிள்ளை அவர்கள் M. A., B. L. (தலைவர்; சர்வீஸ் கமிஷன்) மாநாட்டைத் திறந்து வைத்துத் தற்போதுள்ள மக்களின் நிலை, மடாலயங்கள் செய்யவேண்டுவன, தருமைமடாலயம் செய்துவரும் சீரிய செயல்கள் முதலியவற்றை யெல்லாம் தெள்ளத் தெளிவாகக் கள்ளமில்லாமல் கனிவுடன் எடுத்துக் கூறினார்கள்.

18 முதல் 21—5—51 வரை மாநாட்டிற்குத் (திருமுறைத் திருநாளிற்குத்) தலைமைதாங்கிய திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கள் பேசிய முன்னுரையாகிய பொன்னுரை மக்களுக்கு ஓர் புதிய தெய்வ உணர்ச்சியை எழுப்பியது. அச்சிட்ட அப்பேருரையையும் அனைவர்க்கும் வழங்கினார்கள்.

ஞானசம்பந்தர் திருமுறைகளைப் பற்றி வித்துவான் திரு. S. துரைசாமி ஐயர் அவர்களும், அப்பர் அருள்மொழியைப் பற்றி திரு. அ. ச. ஞானசம்பந்தன் M. A. அவர்களும், சுந்தரர் திருமுறையைப்பற்றி வித்துவான் திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்களும், திருவாசகத் தேனைப்பற்றி வித்துவான் திரு. நவநீதகிருஷ்ண பிள்ளை அவர்களும், ஒன்பதாம் திருமுறையைப்பற்றி வித்துவான் திரு. மு. நடராச தேசிகர் அவர்களும், திருமந்திரத்தைப் பற்றி வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களும், இறையனார் நூலைப்பற்றி ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், பட்டினத்தார் நூல்களைப்பற்றித் திரு. துரை அரங்கனார் M. A. அவர்களும், அம்மையாரின் அருள் நூல்களைப்பற்றி வித்துவான் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களும், கட்டும் விடுதலையும் என்னும் பொருள்

பற்றித் திரு. T. H. விவேகாநந்தம் பிள்ளை B. A. L. T. அவர்களும், சேக்கிழாரும் நாயன்மார் வரலாற்றுக் குறிப்புகளும் என்பதுபற்றி டாக்டர், திரு. ராஜமாணிக்கம் M. A. L. T. M. O. L. Ph. D. அவர்களும், பெரியபுராணம் என்பதுபற்றி வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்களும பேசினார்கள். இந்நான்கு நாட்களிலும் சொற்பெருக்கின் பின்னர் நாட்டுப்பாடல் நடிப்புப் பாடல்களும், திருமுறை உரையாடல்களும், ஆதீன ஆரம்பப்பாடசாலை, ஆதீனத் தேவாரபாடசாலை மாணவர்களால் நிகழ்த்தப்பெற்றன. இறுதி நாளன்று தேவார இசைமணி சங்கீதபூஷணம் திரு. P. சுவாமி நாதன் & பார்ட்டியாரின் இசையரங்கும் நடைபெற்றன. தொடக்கத்திலும் இறுதியிலும் ஆதீன ஓதுவா மூர்த்திகளாலும், ஆதீன தேவஸ்தான ஓதுவாமூர்த்திகளாலும் திருமுறைகள் ஓதப்பெற்றன. இவ்வாறு 21–5–51 திங்கட்கிழமை வரை திருமுறைத் திருநாட்கள் நிகழ்ந்து செவ்வனே நிறைவேறின.

கந்தபுராணத் திருநாள் :

22—5—51ல் நடைபெற்றது. தமிழ்ப்பேராசிரியர் திரு. R. P. சேதுப்பிள்ளை B.A., B.L., அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். முதலில் கந்தபுராணமும் சைவசித்தாந்தமும் என்பதுபற்றி வித்துவான் திரு. இளவழகனார் அவர்கள் பல ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் விளககினார்கள். கந்தபுராணக் காவியச் சுவையை வித்துவான் திரு கண்ணப்ப முதலியார் P. O. L. அவர்கள் சுவைபார்ப்பது போன்று சுருக்கமாகக் கூறி விளக்கினார்கள். முருகன் பெருமையை வித்வான். ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் இனிமையாக எடுத்து இயம்பினார்கள். தலைவரின் முடிவுரைக்குப் பின்னர் விறகுவிற்ற விண்ணவர் பெருமான் என்ற நாடகம் ஆதீனககல்லூரி மாணவர்களால் நடித்துக்காட்டப்பெற்றது.

திருவிளையாடல் திருநாள் :

23—5—51ல் வழக்கம்போல் மாலை 6-மணிக்குத் தொடங்கியது. திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் M.A., B.L., M.O.L., அவர்கள தலைமைதாங்கி முன்னுரைமொழிந் தார்கள். செந்தமிழ்ச்சொக்கர் என்பதுபற்றிப் பாலகவி. திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் எடுத்து மொழிந்தார்கள். தடாதகை திருமணத்தை வித்துவான் திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் தகக வாறு எடுத்துக கூறினார்கள். தமிழுக்குப் பொற்கிழி அளித்ததை வித்துவான் ஸ்ரீமத் மௌன. ம்காலிங்கத் தமபிரான் சுவாமிகள் அவர்கள விளககிப் பேசினார்கள். தலைவர் முடிவுரைககுப் பின்னர் கடவுள் வாழ்த்துடன் விழா இனிது நிறைவேறியது.

இராமாயணத் திருநாள் :

24—5—51ல் இராமாயணத்திருநாள் தொடங்கியது. திவான்பகதூர் T. M. நாராயணசாமிப் பிள்ளை M.A., B L., அவர்கள் தலைமைதாங்கி முன்னுரை வழங்கினார்கள். கவிஞன் கண்ட கடவுள் என்பதுபற்றி திரு. ஸ்ரீநிவாச ராகவன் M. A, அவர்களும், உயிரோவியம் என்பது பற்றி திரு. கி. வா. ஜகந்நாதன M.A. அவர்களும, சிறை யிருநத செல்வி எனபதுபற்றி வாசகமணி விததுவான, திரு. S. ருததிரபதி M. A. அவர்களும், வான்மீகம் எனபதுபற்றி பிர்ம்மஸ்ரீ ய. மகாலிஙக சாஸ்திரிகள M.A., B.L. அவர்களும், கவியினுக்கணி என்பதுபற்றி திரு. சா. கணேசன் அவர்களும், அறியாதார் அறியாதார் என்பதுபற்றி திரு. தொ. மு. பாஸ்கரத்தொண்டை மான் அவர்களும பேசினார்கள். தலைவர் முடிவுரைககுப் பினனர், தேரழுந்தூர் திரு. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர் கள் பார்ட்டியாரால் கம்பர் இசையரங்கு நடைபெற்றது.

திருக்குறள் திருநாள் :

25—5—51ல் திருக்குறள் திருநாள் தொடங்கியது. திருமதி E. T. இராஜேஸ்வரி யம்மையார் M.A., அவர்கள் திறப்புரை மொழிந்தார்கள். வேலூர் சப்ஜட்ஜ் திரு. இரத்தின முதலியார் B.A.,B.L., அவர்கள் தலைமைதாங்கி முன்னுரை மொழிநதார்கள். பின்னர் திருக்குறளும் எல்லிஸ் உரையும் என்பதுபற்றி திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் M.A., அவர்களும், உவமைநலன் என்பதுபற்றி வித்வான் திரு. V. S. குருசாமியவர்களும், வள்ளுவர் உள்ளம் என்பதுபற்றி ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும, திருக்குறள் உரைவளம் என்பதுபற்றி உரைவளம பதிப்பாசிரியர் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களும் பேசினார்கள். தலைவர் முடிவுரைககுப் பின்னர், திருநெலவேலி மந்திரமூர்த்தி உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் தமிழ் வளர்ந்த கதையை வில்லுப்பாட்டாகப்பாடி யாவருடைய உள்ளத்திலும் தமிழை வளர்த்தார்கள்.

கதை முடிந்ததும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளப் பாஙகின்வண்ணம் திரு. T. M. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் மாணவர்களுககும் உடன்வந்த ஆசிரியர்களுககும பரிசிலாக உயர்தர ஆடைகள் வழங்கி "நமது மகாசந்நிதானம் அவர்களின் ஆசியால் இவர்கள் பலநாள் இவ்வாறு தமிழ்ப்பணி புரிந்து சிறப்புற்று ஓங்கவேண்டும்" என்று வாழ்த்தினார்கள்.

கடைசியாக ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்த பெருமக்கள் சொற்பொழிவாற்றிய அறிஞர்கள் முதலிய யாவர்க்கும் ஆசியுரை அருளினார்கள்.

சாத்திரத் திருநாள் :

26, 27—5—51 ஆகிய இரண்டு நாட்களும் தருமபுர ஆதீனப் பிரசார கோஷ்டித் தலைவர் ஸ்ரீமத் சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் சாத்திரத் திருநாள் தொடங்கியது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் சாத்திர தோத்திரங்கள் மனிதவாழ்க்கையாகிய படகிற்குக் கிடைத்த இரு துடுப்புக்கள் என்றும், அவற்றின் துணையாலேயே துன்பக்கடலை நீந்தமுடியும் என்றும், அவற்றுள் சாத்திரமே தனிப் பெருமையுடையது என்றும், சாத்திரங்களுள்ளும் சைவசித்தாந்தமே எல்லாச் சமயத்தாராலும் போற்றப்பெறும் உயர்ந்த தகுதியடைந்தது என்றும் ஆசிகூறி மாநாட்டைத் திறந்துவைத்தார்கள்.

தலைவர் முன்னுரைக்குப் பின்னர் முதல் நாள் சிவஞானபோதம் என்பதுபற்றி திரு. க. வச்சிரவேலு முதலியார் B.A.,L.T., அவர்களும், சிவப்பிரகாசம் என்பது பற்றித் தாம்பரம் திரு. பூ. சமரபுரி முதலியாரவர்களும், இரண்டாம்நாள் ஞானந்த பரிபாஷை என்பதுபற்றிச் சைவசித்தாந்த சரபம் காசிவாசி சிவத்திரு ஈசான சிவாசாரியாரவர்களும் பேசினார்கள்.

பின், சொக்கலிங்கப் பெருமான் தரிசனமும், மாகேசுவர பூசையும் நடைபெற்றன. இரவு குருஞான சம்பந்தர் சரிதம் வில்லுப்பாட்டும், தருமையாதீன இசைப்புலவர் எட்டயாபுரம் சமஸ்தான வித்துவான் இசையரசு, எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் பார்ட்டியாரால் சங்கீதக் கச்சேரியும் நடைபெற்றன. இசையரசின் இசையரங்குடன் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு செவ்வனே நிறைவேறியது. இரவு பட்டிணப் பிரவேசமும் சிறப்பாக நடைபெற்றது.

26—5—51 ஆதீனஸ்தாபகர் குருபூஜாதினமாகலின் திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள அவர்கள் விஜயம் செய்து குரு வழிபாடும, இறைவழிபாடும் ஆற்றினர்கள். ஆதி குமர குருபர சுவாமிகளின் 263-வது ஆண்டு நினைவு வெளியீடு களாகிய கந்தர் அலங்காரம், கந்தரனுபூதி ஆகிய முருகன் புகழ்நூல்களை அன்பர்களுக்கெல்லாம் வழங்கி ஞர்கள்.

நண்பகல் ஸ்ரீசொக்கலிங்கப் பெருமான் விசேஷ பூஜை முடிந்ததும குருபூஜை விழா மலராகிய திருக் குறள் உரைவளம் (பொருட்பால) ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களால் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

மாநாட்டிற்கு வந்திருந்தார்கட்கெல்லாம் உண்டியும் உறையுளும சிறந்த முறையில் செவ்வனே வழங்கப் பெற்றன. கண்டார் களிகூர்ந்தார். கேட்டார் வேட்கை யுற்ருர். ஒலிபெருக்கி ஒலித்து ஓராதாரையும உணரச செய்தது. மாநாட்டுப் பந்தல் இந்திரர் சபையெனச் சுந்தரமாய் இலங்கிற்று. மேடையும் சிறந்த மாடமாய் விளங்கிற்று. அடியவர் கூட்டமும அன்பர்கள் ஈட்டமும புலவர்கள குழுவும திருமுறை ஓதும் திருவினர் குழாமும காணககாணக கவினெடும விளங்கின. 'கண்களெண்ணி லாத வேண்டும' என்ற பாடற்பகுதி ஒவ்வொரு அன்பர் சிந்தையிலும தோன்றியது. இவற்றையெல்லாமவிடக் குறிப்பிடத்தககது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் நாடோறும்வந்து எழுநதருளியிருந்து அருளாசிவழங்கிய காட்சி. இவ்வளவுசிறப்போடு இமமாநாட்டை நடதது வித்த ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம அவர்கள் நீடூழி வாழ்ந்து இன்னும் இத்தகைய அறச்செயல்கள பல வற்றையும் ஆற்றவேண்டும என்று எல்லாமவல்ல ஸ்ரீசொககலிங்கப்பெருமானை மனமொழி மெய்களால் வணங்கி வாழ்த்துவோமாக.

தொன்னெறி

(வித்துவான் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், ஆரணி)

'நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை யாண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ'.

எல்லாவுயிர்களும் இன்பத்தையே விரும்புகின்றன. துன்பத்தை விரும்பும் உயிர் ஒன்றேனும் இல்லையோ என்பார் உளரேல், அவரை நோக்கி, நீர் துன்பத்தை விரும்புதல் உண்டோ என்று வினவுதல் வேண்டும். சாதலை வேண்டுவாரிலர், அறியாமையை விழைவாரிலர் என்பன முதலாகப் பல கூறலாம். இன்பத்தை வேண்டு வோர் இலர் என யாவரும் கூறலொன்றாது. ஏன்? ஒருவன், வள்ளலிடம் போய் இரக்கும் பொருளைக் கொடுக்க முடியாதபொழுது, வள்ளற்குச் சாதலே இன்பமாகத் தோன்றுவதால், அவ்வின்பம் பெறவே அவனும் விரும்புகின்றான். இவ்வுண்மை,

'சாதலின் இன்னாத தில்லை, இனிது அதூஉம்
ஈதல் இயையாக் கடை'

என்னும் திருக்குறளால் தோன்றும். அதுவும் இனிது என்றமையால், இன்பத்தையே விரும்பியதாதல் பொய்க்காது.

அறியாமையைப் பல பொருள்களில் வேண்டிப் பெற்றனர் பெரியோர். கொடுக்கமுடியாத பொழுது சாதலை வேண்டியின்புற்ற சிறப்பும் கொடுக்கவல்லராய பொழுது இன்னார்க்கு,இன்னது, இவ்வளவு, இப்பொழுது என்னும் எவ்வரையறையுமில்லாது கொடுக்கும் அறியா மையை வேண்டியபுகழும் பாக்களில் இடம்பெற்றுள்ளன.

அதைக் 'கொடைமடம்' என்றனர். கொடைமடம் இன்பந்தாராது துன்பந்தருமாயின் அதை விரும்புவார் எவர்? ஒருவரும் இரார்.

இறைவன் நஞ்சுண்டதும் உயிர்களை வாழ்வித் தருளும் இன்பத்தின் பொருட்டே என்பது, "மஞ்சைப் போழ்ந்த மதியஞ் சூடும் வானோர் பெருமானார் நஞ்சைக் கண்டத்து அடக்கும் அதுவும் நன்மைப் பொருள் போலும்" என்று அருளிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருவடிகளை வணங்குவோர்தாம அறிவர். அவர் குறித்த நன்மை ஆண்டவனுக்கோ? அடியார்க்கோ? அடியார்க்கே. நன்மை (சிவம்) நன்மை அடைதல் இல்லை.

இவ்வுண்மைகளை நோக்கின், உயிர்களெல்லாம் துன்பத்தை நாடாமல் இனபத்தையே நாடுதலும் துன்பத்தை நாடும்போதும் இன்பமே குறிக்கோளாத லும் எளிதின் பெறப்படும. படவே இன்பமே நாடும் உயிர்க்கு இன்பம் எது? அஃது எத்தகையது? எவ்வள வினது? எங்கு உள்ளது? எதனால் வந்தெய்துவது? எவ்வாறு நேர்வது? என இன்னோரன்ன பல வினாக்கள் எழுதல் வேண்டும்.

உலக இன்பம் பின்னர்த் துன்பத்திற் கேதுவானது. உலகின் நீங்கி உயிர் தனியாய் நின்றால் "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல அதனின் அதனின் இலன்" என்ற வுண்மைப்படி, உலகின் நீஙகித் தனியே நின்ற உயிர்ககு இன்பம் உண்டாவதெனறே வைத்துக கொளினும், அது சிறந்தது ஆகாது. அது துகளறு போதத்திற் கூறியவாறு, சகல தரிசனத்திற்கும் ஞான தரிசனத்திற்கும் இடை நின்ற ஐவகை நிலையாமே யன்றிச் சிறந்த இன்பநிலை யன்று. உயிர் உலகின் நீங்கி இறைவனருளைப்பெற்றுத் துய்க்கும் இன்பமே

அழியாப் பேரின்பம். உயிர்கள் ஒரு தன்மையனவா யில்லாமையால் அவை விரும்பும் இன்பமும் அழியாப் பேரின்பமாக இராமல், குறைவும் கூட்டமும் ஆகிய இன்பமாயிருக்கின்றது. இருப்பினும், உயிர்க்குப் பேரின்பத்திலேதான் நாட்டமுண்டு. விரும்பும் இன்பம் குறைந்ததாயிருக்க எவ்வுயிரும் இசையாது. என்றுங் குறைவைப் பெறுவாறு நிறைந்த இன்பத்தையே விரும்பும் உயிர்தான் ஆண்டவனடிமைத்திறத்தைநன்கு கடைப்பிடித்ததாகும். ஆகவே எல்லாவுயிர்க்கும் இன்பத்தில் விருப்பாயினும், பேரின்ப விருப்பங் கொண்டவுயிரே நல்லுயிர் எனப் போற்றப்பெறும்.

நாத்திகரும் இன்பத்தை விரும்புமாற்றால், அறியா மலே கடவுளை விரும்புகின்றனர். தமது விருப்பத் தையே இல்லை யென்னும் பேதைமை நாத்திகர்க்கே உரியது.

எல்லாச் சமயத்திலும் அவரவர் தெய்வத்தை 'இன்பம்' என்னுதார் அரியர். நம் சைவ சமயத்தில், ஆசாரியர்களும் மற்றைய அடியவர்களும் தம் வழிபாட் டிலும் வாழ்த்திலும் போற்றிலும் இறைவனை இன்ப மென்று குறித்து வணங்கினர். 'ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே' என்றதறிக. அவ்வணக் கமே, உடம்பைப் பெற்றுவாழும் உயிர்க்குப் பயன். ஊனாலும் உயிராலும் உள்ளபயன் கொள நினையும் நாம் நம் உடலில் வைக்கப்பட்டுள்ள தலையைச் சிவன் கழலே வணங்கவும், வாயை அவன் புகழே வாழ்த்தவும், உள்ளத்தை அவனடியவர் இனத்தையே இணங்கவும், அடியாரல்லாதாரொடும் இணங்காது பிறவற்றைப் பேசாது வணங்காது பாதுகாக்கவும் வேண்டும். இவ் வாறு காத்தால், ''எங்கும் இல்லாததோர் இன்பம் நம் பாலதாகும்.''

ஆயினும், அப்பேரின்பத்தை எவ்வுகத்திலும் எந்நாட்டிலும் அடைந்தநுபவித்தார் பலரோ சிலரோ எனலாம். அவ்வையந்தீர 'பிறந்தநாள் மேலும் பிறக்குநாள் போலுந் துறந்தோர் துறப்போர் தொகை' என்னுந் திருவருட் பயனைப் போற்றுக.

வடநாட்டில், தென்னாட்டுச் சைவநெறிமுறையை அறிந்து வீடுபெற்றார் உளரோ? இலரோ? எனலாம். வடநாட்டுச் சைவமுறையை அறிந்து அவ்வாறு வீடு பெறத் தென்னாட்டவர்க்கு வேண்டா என்பர் இந்நாட்டுப் பற்றுடையோர் சிலர். 'அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்' எனனும் நம்பியாரூரர் திருவடிச்சான்று கொண்டு அதை நிறுவுதல் நன்று.

இத்தென்னாட்டுச் சான்றோர்க்கெல்லாம் தனித்தலைவராய் விளங்கும் நால்வரும் மற்றைப் பெரியோரும் வடநாட்டுச் சைவமுறையைப் போற்றலும் தூற்றலும் செய்தாரல்லர். நம் மாணிக்கவாசக சுவாமிகள் 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்றதோடமையாது, 'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்றதால், நாமும் அபேதமே கொள்ளற்குரியோம். இத்திருவாசகத்தால், சிவன் தென்னாடுடையவன் என்பதும், எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பதும் தெளிவாதலொடு உடையதாந் தொழிற்குத் தென்னாடும் இறைமைக்கு எந்நாடும் உரிய நிலையையும் நன்கு தெளிவாதல் வேண்டும். இறைமை எந்நாட்டிற்கும் பொது. உடைமை தென்னாட்டிற்கே சிறப்பு. இச்சிறப்பிற்குரிய தென்னாடு, சிலயாண்டுகளாகத் திருமுறைத்திருவிழாக்களைச் செய்து வரினும், இன்னும் பலவேறுவகையில், தன்னையுடைய சிவனைத் தொன்னெறி பிறழாதவாறு வழிபட்டுய்யும் அரும்பெரும்பேறு எய்துதல் வேண்டும்.

தொன்னெறி பிறழ்ந்த குற்றமே இப்பொழுது சிவனைவழிபட்டுய்யும் அளவிலாப் பெரும்பேற்றைத் தென்னூடு இழந்து நிற்றற்குக் காரணம். சிவன்கோயில்களையும் சைவமடாலயங்களையும், சிவாசாரியர்களையும், மடாதிபதிகளையும் அந்நெறி வழாதவண்ணம் போற்றிவந்தனர் பழைய தென்னூட்டுச் சைவ நன்மக்கள். இற்றைய மக்கள் அந்நெறியின் உயர்வுஉண்மையும் உரிமையும் அதனைக் காக்கும் கடமையும் அறியாமையேயன்றி, அறிந்தே தீங்குசெய்கின்றனர். இந்நாடுஎன்றும்இன்பம் பெற்று நன்குவிளங்கவேண்டின், சிவாலயங்களையும் மடாலயங்களையும் உயரிய நிலையில் வைத்துப் போற்றுதல் வேண்டும். மழைபெய்யாது கெடுக்கத் தொடங்கிய காலையும், அந்நாளில் நடந்த சிவத்துரோக கிருத்தியத்தையும், அதைச் செய்வித்த வேற்றுச்சமயத்தாரையும் சிறிது நினைந்துபார்த்தல் வேண்டும். சிவனை வழிபட்டுச் சிவமாகிய பெரியோர் பலரும், தொன்னெறி வழாதிருக்கவேண்டி அரும்பெரும் பாடுபட்டனர். அந்நெறியை அவ்வாறே வழுவாமற் காத்துவந்தனர். அது நன்கு கைவந்தும், நெறிகுறைந்ததென்றே தெரிந்திலதென்றே வருந்தி வேண்டினர். மாணிக்கவாசகரும், “உனை வந்திப்பதோர் நெறியறியேன், நின்னையே அறியேன், நின்னையே அறியும் அறிவறியேன்” என்று கவன்றது அறிக. அதன் காரணம் யாது?

“குறியும் நெறியும் குணமும் இலார் குழாங்கள் தமைப் பிறியும் மனத்தார் பிறிவரிய பெற்றியன்...... தில்லையாண்டான்” என்ற ஒன்றேயன்றி வேறில்லை. நெறியிலாரினத்தைப் பிறிவிலார்க்குத் திருவருளில்லை என்பது, அவர்க்கு அச்சுறுத்தி வந்தது. நமக்கோ நெறியின்மையும் வருத்தந் தந்திலது. குறியும் நெறியும் குணமும் உடையாரினத்தைப் பிறியா மனத்தாரைப் பிறியாப் பெற்றியன் சிவன் என்பதில் நம்பிக்கை உண்மையாக வாய்க்கப்பெற்ற சைவன் எவனும் தொன்

னெறியை அறிய - அடைய - புகழ முயலாமலிரான். முயலாது போனாலும் இகழான். நெறியறிந்தால் இந்நாளிற் கோயில்களையும் மடாலயங்களையும் பொருள் நிலை யொன்றே நோக்கி ஆட்சி வயப்படுத்தும் தீங்கு நேராது. கோயில்கட்கும் மடங்கட்கும் அன்பர்கள் உதவிய பொருள்களிற் கொண்ட பகுதியைப் போர்க்குப் பயன் படுத்திய தீங்கே இக்கொடிய பஞ்சத்திற்கு முதற் காரணமாகும். ஏனைய துணைநிமித்த காரணங்கள் அறிஞர்க்கு விளங்காமலிரா.

மாணிக்கவாசக சுவாமிகள் தில்லையிற் கண்டது அரிய நரகில் வீழ்வோரைச் சிந்தை தெளிவித்துச் சிவமாக்கி ஆண்ட அந்தமிலா ஆனந்தத்தை. இந் நாளில் அங்குச் சென்று தரிசிப்பார்க்கு அந்நெறி யில்லாமையால், அவ்வாநந்தம் ஒருதுளியும் புலனாக வில்லை. அவருக்கு நடராஜப்பெருமான் தித்திக்குஞ் சிவபதமாயிருந்தார். இவர்கட்குப் பஞ்சாமிர்தந்தான் தித்திக்கும். யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டுவானாகி நின்று, அவ் யான் எனது என்(னும்) உரை(யை) மாய்த்துக் கோதில் அமுதானானைப் பத்தி மையும் பரிசுமிலாப் பசுக்கள் பாசமறப் பணிந்து பரமுத்தி எய்தாமல், அதிகாரஞ் செலுத்தி அரு நரகுக்காளாகின்றன. இப்பாவிகளுக்கும் உண்டாமோ பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து, ஆவி யாக்கை இரண்டையும் முறையே 'யான்' என்றும் 'எனது' என்றும் செறுக்குறுதல் யாதும் இன்றி அறுதல்? மாணிக்கவாசகரைத திருநாவுக்கரசர் 'குடமுழநந்தீசனை வாசகனாகக் கொண்டார்' என்றருளினர். அது வாய்மை யாதலை 'நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை குரம் பையிற் புகப்பெய்து' என்றது வெளிப்படுத்தி அதிசயப் படுத்தும். படிப்பினும், தொன்னெறி வழுவியவர்க்கு அந்நன்னெறி புலமைதோன்றாது. தோன்றினும்,

'மண்ணிலே பிறந்திறந்து மண்ணுவதற்கு ஒருப்படு கின்'ற பொல்லாமையைப் போக்கிக்கொள்ளப் புத்தி யுண்டாகாது. உண்டானல், "மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை ஆழாமே" செய்யும் திருவருள் நெறியைப் போற்றும் சிவாலயங்களையும் மடாலயங்களையும் பண் டையமுறையில் பாதுகாத்துப் பயன்பெற நன்முயற்சி யடைவர் மக்கள்.

மக்கள் விரும்புவது இன்பத்தை. வெறுப்பது அவ் வின்பந்தரும் நெறியை. இம்முரண்பட்ட செயல் விலங் கிற்கு மில்லையே! மக்கட்கு உண்டாகலாமோ?

மாணிக்கவாசகர்க்குச் சிவபெருமான் "மழக்கை யிலங்கு பொற்கிண்ணம் என்றலால் அரிய என்று உனைக் கருதுகின்றிலேன்" என்னும்படி, கண்ணுறக் கண்டுகொண்டு களித்த"ற்கு நேர்பட்டு நின்றனன். அதுவே இருள்கடிந்து வெளியே எழுகின்ற ஞாயிறே போன்று, உள்ளத்து எழுகின்ற ஞாயிறுபோன்று நின்றநிலை. இந்நிலை அருள்நிலை. இது மருள் நிலை யுடைய மாக்களுக்கு விளங்காது. உரையும் உணர் வும் இறந்து நின்று உணர்ந்தால்தான் விளங்கும். அவ்வாறு விளக்கம்பெற, திருவருள் நெறிக்கு ஒத்து நில்லாது மாறி நின்று மயக்கிடும் வஞ்சப்புலன் ஐந்தின் வழியை அடைத்துவிடவேண்டும். அவ்வழியை அடைக்க மறைவழி யொழுகவேண்டும். மறைவழி என்பது வேத மார்க்கம். ஆகமமார்க்கமும் இதிலடங்கும். திருவருள் நிலை உயிர்களு வேதாகமப்பொருள் வடிவாகத்தான் எய்துகின்றது. ஆலயங்கள் அப்பொருளைப் படமா நின்று காட்டுகின்றன. மடங்கள் அவற்றைக் கற்பித் தொழுகித் தெளிவிக்கின்றன. அப்பன் கழல்களேத்திச் சிறந்தினிதிருக்கும் அறிவினரே இதனை இசைவர். பூசித்துக்காட்டுமிடம் கோயில். பூசிக்கக் காட்டுவது மடம். பாச வேரறுக்கும் பழம் பொருட்குப் பூசனை

போல் உகப்பது வேறில்லை. மொட்டறு மலர்பறித்து இறைஞ்சிப் பத்திமாய் நினைந்து பரவுவார்க்குப் பரகதி கொடுத்து அருள்செய்யும உண்மையைக் கோயிலும் மடமும் அன்றி வேறெதுவும் காட்டாது. அவ்வுண்மைக் கென்றே தோன்றியதால்தான், கோயில்களிற் சிறப் பொடு பூசனையும் மடங்களிற் குருபூசையும் தொன் னெறியை விளக்கி வருகின்றன. அருள் நிலையை அறிந்து, அருளைப்பெற்றுப் பேரின்ப வாழ்வு நிகழ்த்த வேண்டின் - இம்மையில சிறு துன்பமும் நேராது, முழு நலத்தோடும் வாழவிரும்பின், சிவாலயங்களும் மடங் களுமாகிய அருள் நிலைகளை மககள் யாவரும் காக்க முற்பட்டு வருக. வாராவிடின், காப்பவரை ஊக்குக. கெடுப்பவரைத் தடுக்க. ஒன்றுஞ் செய்யாதோர்கு இன்பம் எயத வழியில்லை. ஏன்? அது நெறியன்று; நெறியல்லா நெறியே; அந்நெறிசென்றோர் முததி நெறி யறியாத மூர்க்கரேயாவர்.

சிறு நெறிகளைத் தவிர்ந்து, திருவருளே சேரும் வண்ணம் பத்திநெறி நின்று, பழவினைகளைப் பாற்றி, சித்தமலம் அற்று, சிவமாகி, அழியா இன்பம் எய்து வதற்குத் திருவெண்ணீறணியுஞ் சைவத் தூய்நெறியே உய்யுநெறி

''மானம் அழிந்தோம் மதிமறந்தோம் மங்கைநல்லீர்
வானந் தொழுநதென்னன் வாாகழலே நினைந்தடியோம
ஆனந்தக் கூததன் அருள்பெறில்நாம் அவ்வணமே
ஆனந்த மாகிநின் றூடாமோ தோணோக்கம்.''

திருச்சிற்றம்பலம்.

அறிவும் அநுபவமும்

(வித்துவான். சிவலிங்கனார். மயிலம)

"எமது கம்பெனிக்கு ஒருமானேஜர் தேவை. அவர் பி. ஏ. பட்டம் பெற்றவராகவும் ஐந்து ஆண்டுகளாவது ஒருகம்பெனியில் இருந்து அநுபவம பெற்றவராகவும இருததல் வேண்டும. மாதச் சமபளம ரூ. 500—0—0"

இதுபோன்ற தேவை விளம்பரங்கள் நாள்தாள்களில் அடிக்கடி வெளிவருவதைக காணலாம். மானேஜர் வேலைககு பி. ஏ. படித்த அறிவு மட்டும் இருந்தால் போதாதென்று அநுபவமும் இருககவேண்டும என விருமபுகின்றனர் கமபெனிககாரர். படித்த அறிவுடன் அநுபவமும இருந்தாலதான் வேலையைத் திறம்பட நடத்தமுடியும் என்பது அவரது கொள்கை. உண்மை தானே? அறிவும் அநுபவமும ஒன்றுகுமா?

அறிவு உயிர்ககுணம். இயல்பான குணம். உயிர் எடுக்கும உடலநிலைககேறபவும் சூழநிலைககேற்பவும் அவ்வறிவு விளககமபெறும. மககள் உடம்பு எடுத்த உயிர் ஐயறிவுடன் பகுத்தறிவும பெறுதலும், விலங்குடம்பு முதலியவற்றை எடுத்த உயிர் ஓரறிவு முதல் ஐயறிவுவரை வகைவகையாகப் பெறுதலும் உண்டன்றே? நாய் போன்றன தாம சேர்ந்த இடத்தால் தம இயல்பான அறிவில சிறப்புறுதலைக காண்கின்றோம. மககளும் தாம சார்நத சூழ்நிலைககேற்ப அறிவு விளககம் பெறுவர். புலால உணவு இல்லாத வழிவந்த குலங்களில் உள்ளோருள் பலர் சிறநத அறிவினராதலுக்கும, மாறுன குலங்களில உள்ளோருள் சிலர் அவ்வாறுதலுக்கும் காரணம் சார்ந்த குலங்களே

யன்றோ? உடலமைப்பு சூழ்நிலைகளால் விளக்கம் பெறு தலேயன்றிப் பிறர் அவ்வப்போது உணர்த்துவதாலும் விளக்கம் பெறும். குழந்தைப் பருவத்தில் ஒன்றும் அறியாதிருந்து பெற்றோர்கள் அறிவிக்க அறிவதும், இளமைப் பருவத்தில் பெற்றோர்களுடன் ஆசிரியர் அறிவிக்க அறிவதும், வாழ்க்கையில் ஈடுபட்ட இடத்துப் பெரியோர் அறிவிக்க அறிவதும் உண்டன்றோ? இவ்வாறு அறிவது அறிவிக்க அறிவதாகும். நூல்களைக் கற்பதினாலும் அறிவு விளக்கம் பெறும்.

உடல் அமைப்பாலும் சூழ்நிலையாலும் பிறர் அவ்வப் போது அறிவுறுத்துவதாலும் நூல்களாலும் ஒருவன் பெறும் அறிவின் விளக்கத்தினை நாம் ஈண்டு அறிவு என்கின்றோம். உயிர்க்கு, இயற்கையாகவே அறிவுப் பண்பு உண்டு. ஒருவனை அறிவுடையவன் என்றும் மற்றொருவனை அறிவற்றவன் என்றும் கூறுதற்குக் காரணம் அறிவில் விளக்கம் இருப்பதாலும் இல்லாமை யாலுமேயாம். மேற்கூறப்பட்ட காரணங்களால் விளக்க மான அறிவினைப் பொதுவில் அறிவு என்று கொள் வோம். இனி அநுபவமாவது யாது என்று பார்ப்போம். விளக்கினைத் தொடப்போம் குழந்தையைப் பெற்றோர் தம் கைவிரலை விளக்கில் சுட்டுக்கொள்வது போல் நடித்துக்காட்டவும் அக்குழந்தை, ‘விளக்கு சுடும்’ என்று அறியாமல் தன் கைவிரலைச் சுட்டுக்கொண்ட பின்னர் ‘விளக்கு சுடும்’ என்று அறிவது உண்டல்லவா? அவ்வாறு அறிவதுதான் அநுபவம் என்பதாகும். எனவே அநுபவமாவது யாதொன்றையும் தானே நேரில் கண்டறிந்து பெறும் முடிவு என்னலாம். இது அநுபவ அறிவு எனப்படும்.

ஒருவனுக்கு அறிவும் அநுபவமும் இருக்குமானால் அவன் எச்செயலையும் எளிதிலும் பயன் உண்டாகவும் செய்துமுடிப்பான். அதனாலன்றோ வேலைக்கு அறிவும்

அநுபவமும் உடையார் தேவை என்று விளம்பரப் படுத்துகின்றனர். இவ்வறிவும் அநுபவமும் சிற்சில இடங்களில் தனித்தனியாகவும் சேர்ந்தும் பயன்படு கின்றன. சிலசமயங்களில் ஒன்று ஒன்றை மறைத் தும விடுகின்றன. இவ்விரண்டும் எதிர்காலத்தில் பெறலாம் பயன் கருதியே செலுத்தப்படுவன. இவற் றிற்கு ஏற்ற உதாரணங்களைப் பெரியபுராணத்திருந்து தருகின்றேம.

சந்தனநங்கையார், சிறுத்தொண்டர் வீட்டு வேலைக் காரி. வேலைககாரிக்கு இருக்கவேண்டிய குண நலங்கள் வாய்ககப்பெற்றவர். சிறுத்தொண்டர் சிவனடியார் கட்கு அமுதருத்திப் பின்னுண்ணும பெருந்தகையாளர். ஒருகால சிவபிரான் வடநாட்டுப் பயிராகி வேடத்துடன் வந்து, நலலகுடிககு ஒருமகனாய் ஐந்தாண்டகவையின னாய் உளள சிறுவனைத் தாய்பிடிககத் தந்தைஅரியும் போது தம்முள் மனமுவந்து சமைத்தகறி யாம் இட்டுண்பது என்னத தொண்டரும் அவ்வாறே சமைத்து அருத்துவதாகக் கூறி வந்து தம் மனைவியா ரிடம் கூற, இருவரும அத்தகைய பிள்ளையினைப்பெற முடியாதென்று தம்பிள்ளை சீராளனையே சமைப்பது என்று முடிவிற்குவந்து பள்ளியில் பயிலும் சீராளனை அழைத்துவந்து சமைககும்போது வெண்காட்டுநங்கை யார் பிள்ளையின் தலையினைக கறிககாகாது என விலககி அப்புறப்படுத்தும்படி சநதன நங்கையாரிடம கொடுத் தனர் தலையினை வாங்கிய சந்தன நங்கையார் உடனே அப்புறப்படுத்தாமல் தம் அறிவினைப் பயன்படுத்துவா ரானர்?.

"பயிராகி நரமாமிசம் கேட்டனர். இதுவரையாரும் கேட்டிலர். நம தொண்டரும் இவ்வாறு அமுதருத்தி னரும் இலர். அம்மையாரும் சமைத்தறியார். நரமாமிசம கேட்டவர் எத்தகையராவார்.

"...... .....ஒருகுடிக்கு நல்ல சிறுவன் ஒருமகனைத்
தாதைஅரியத்தாய்பிடிக்கும்பொழுதில் தமமில்மனமுவந்தே
ஏதமின்றி யமைத்தகறி யாமிட டுணபது"

என்றுராமே! என்ன சோதனை! நம் அம்மையார் தலை யினைக கறிககாகாதென விலககிவிட்டாரே! உலகில் ஆடு முதலியவற்றில தலைககறியினையும் சமைத்து உண்ணுவதுண்டே! வநத பயிராகியும் தலைககறி எங்கே என்று கேட்டுவிட்டால்! நாமாமிசம் வேண்டியவர் இதனையும விடுவாரோ! ...ஆம் இதுதான் செய்யத் தக்கது. நம அமமையார்கும அடியார்கும் தெரியாமலேயே இத்தலையினைச்சமைத்து வைப்போம்" இவ்வாறு அவரது அறிவு வேலைசெய்கது. இவ்வறிவின் முடிவு தலையினைக கறிசமைகக வேண்டும எனபது. இம முடிபு அநுபவமுடிபு அனறு. முனனொருகால இவ்வாறு நிகழநதிருந்ததாயின அநுபவமுடிபு எனனலாம். அவ்வாறில்லை அதனால அறிவே முடிபிற்கு வந்தது. தலையும் கறிசமைககப்பட்டது. பயிராகி உணவுண்ண அமர்ந்தபோது கலைககறி எங்கேயென்று கேட்க அமமையாரும அடியாரும மயங்கும சமயம் சந்தனநங்கையார், "அதனை அமுதுண்ணுமபோது பயிராகி நினைககவருமஎனறே சமைததுவைததேன்" என்று கூறிககொணர்நது கொடுததார். என்னே அறிவின் விளககம.

திருவொற்றியூர் சென்று கோயிலில் சிவபிரானை வணங்கிய சுந்தரர் ஆங்கு இறைவனுககுத் திருமாலை தொடுத்தணிந்து மறைநத சங்கிலிநாச்சியாரைக் கண்டார். கண்டதும மனம மாறுபட்டுக காதல்வலைப் பட்டார். அருகில் இருந்தவரால சங்கிலியார் நிலைமையினை உணர்ந்து அவரை மணககவிருமபினர். விரும்பியவர்,

"மின்னார் சடையார் தபக்காளாம்
விதியால் வாழும எனைவருத்தித்
தன்னா அருளால் வரும்பேறு
தவத்தால் அணையா வகைதடுத்தே
என்னுருயிரும எழில்மலரும்
கூடப் பிணைக்கும இவள்தனனை
பொனனார் இதழி முடியார்பால்
பெறுவேன என்று போயபுக்கார்."

"பொன்னார் இதழி முடியார்பால பெறுவேன்" என்று திட்டமாக முடிவுகட்டிவிட்டார். சுநதரர் இவ்வாறு முடிவுகட்டக காரணம என்ன? ஒரு பெணணைக கண்டதும அவளை மணப்பதாக எணணினார் அதறகுப் படும துனபம பலவாக இருகக இவர் எளிதாகக கருதி விட்டாரே! இதற்கு இவர் கணட அநுபவநதான காரணம. அநுபவம யாது?

ஒருகால் திருவாரூர்ககுச் செனறிருந்த சுந்தரர் கோயிலில் பரவையார் என்ற உருத்திரகணிகை வகுப்பு மாதராரைக்கணடு அளவறற காதல் கொண்டு வருநதினார். இசசுந்தரர் முனபு தமககு நடகக இருந்த திருமணத்தினைச் சிவபிரானல் தடுதது ஆட்கொளளப் பட்டவா அதனல பரவையாரைக காதலிததவர் அவரை மணகக என்செய்வது என வருத்தமுற்றனர். பின், "உலகததொடர்புற்று யான் வருநதாதவாறு திருமணத்தைத் தடுததாட்கொண்ட சிவபிரான் பரவையை மணக்க இசையாதிரார். ஏன் எனின், பரவையை மணககவிலலை என்றல் ஏன் என் உயிர் உடலில் நிற்காது. அதனல் என்னை ஆட்கொண்ட இறைவன் என் உயிர்போக விடமாட்டார். பரவையை மணககும்படி அருளசெய்வார்" எனககருதிப் பரவையை மணந்து கொடுககும்படிச் சிவபிரானை வேண்டிநின்றார்.

அவ்வாறே சிவபிரானும் சுந்தரரைக் காதலித்த பரவையாரை அவர்க்கு மணம்செய்து கொடுத்தார்.

இந்த நிகழ்ச்சி மனதில் தோன்றவே நம் சுந்தரர் "பொன்னார் இதழி முடியார்பால் பெறுவேன" எனத் துணிந்தார். பரவையாரைச் சிவபிரான் மணந்து கொடுத்த அனுபவம் உடையர் ஆதலின் சங்கிலியாரைக கண்ட இடத்துக் காதல் தோன்றவே, "இருவரால் இப்பிறவியை எமபெருமான் அருளால் எய்துவித்தார், மருவும் பரவையொருத்தி இவள மற்றவளாம" என எண்ணி அம்முடிபுக்கு வந்தார். இதற்குப் பலநூல் அறிவு தேவையில்லை. தாம செய்த அநுபவ அறிவே போதுமானதன்றோ. சந்தனநங்கையார் அநுபவம் இன்றித் தனித்த அறிவு ஒன்றிலேயே பயன்கண்டது போலச் சுந்தரர் அறிவின துணையின்றி அநுபவம ஒன்றிலேயே பயன்கணடார். சங்கிலியாரைச் சிவபிரானல் பின் மணந்தாரன்றோ? (வரும)

தருமபுர ஆதீன வெளியீடு.

திருக்குறள் அறத்துப்பால் - உரைவளம்

உரைப்பகுதி, *உரைவிளக்கப்பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி என்ற நான்கு தலைப்பில் உரைவளம் அமைந்துளளது. டபிள்கிரவுன்சைஸ்; 584 பக்கங்கள்.*

விலை தபாற்கூலியுள்பட ரூ. 7—0 - 0.

(சொற்பப்பிரதிகளே கைவசமுள்ளன)

K. பாலநாதன்,
செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுரம், மாயூரம P. O.

தெய்வச்சின்னம்!

[C. S. பாலு.]

[பொன்னேரிக்கடுத்த திருப்பாலைவனம் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தினுள் இருக்கும் ஓர் கற்சிலையின் தோற்றத்தைக் கண்டும், ஒருசில ஆதாரமான செய்திகளைக்கொண்டும் எழுந்த கற்பனை ஓவியம்.]

நீண்ட நாட்களாகவே, நிம்மதியற்றிருந்த மனம் நிலைபெற, சாந்தியடைய, வெளியூரில் வசித்துவந்த தமயன் இல்லம் சென்றேன். தமயன் வசித்துவந்த ஊர், ஒருகாலத்தில் பெரிய நகரமாயிருந்திருக்குமோ என்று ஐயுறத்தக்க அறிகுறிகள் தென்பட்டன. தமயன் வீட்டிற்கு வந்து, ஒருவார காலமாகிவிட்டது. மீண்டும் நிம்மதியுள்ளநிலை: மனதின் பாரம் மேலும் வலுத்தது. எவ்வளவோ மனதைக் கட்டுப்படுத்தினேன் எனினும், குரங்கு என்ற மனது தன்பிடியிலிருந்து எங்கேயோ ஒருமூலையில் தாவத்தான் செய்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்று ஞாபகம்: வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் அன்று புதுசினிமாப் படம் பார்க்கச் சென்றுவிட்டனர். நான் வெளித் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தேன். வானிலே வெண்ணிலவு: இரவின் தொடக்கம். அமைதி குடிகொண்டிருந்தது; என் தேகம் ஏனோ வியர்த்திருந்தது!! இந்தநிலையில், தென்றல் காற்றில், எங்கிருந்தோ இனிமையான குரல் மிதந்து வந்துகொண்டிருந்தது. குரலின் இசை என் செவியில் விழுந்ததுமே, நிம்மதியற்றிருந்த மனம் ஒருநிலைப்பட்டது. குரல்வந்த திக்கு நோக்கி என் கால்கள் என்னை இழுத்துச் சென்றன! பல குறுக்கும் நெடுக்குமான பாதை வழியே சென்றுகொண்டிருந்தேன், எங்கே செல்கிறேன்? எதற்காக நடக்கிறேன்? இவ்வேளையில் நடந்துசென்று காணும் பலன் என்ன? ஒன்றுமே எனக்குப் புரியாத புதிராகத் தானிருந்தது! எனினும், நடந்துகொண்டே இருந்தேன். அழகான வெண்ணிலவின் அடியிலே பெரியதோர்

இடிந்த கோபுரம் ஒன்று கீழே விழாமலும் முழுத் தோற்றமில்லாமலும், அரைகுறையாகக் காட்சியளித்தது! அமைதியான வேளையிலே, அக்கோபுரத்தைக் கண்ணுற்றதும். எனக்கோர் அளவற்ற மகிழ்ச்சி! ஏன்? நகர நாகரிகத்திலே மூழ்கியிருந்த எனக்கு. அது போன்ற நிஷ்காமியமான இடத்தில் ஆண்டவன் சந்நிதி செல்கிறோம் என்ற மகிழ்வும், இயற்கையின் விசித்திரக் காட்சிகளும், இன்னதென்று சொல்ல முடியாத ஒருவித ஆனந்தத்தைக் கொடுத்தன!

இத்தனை நேரமும் தென்றலில் கலந்துவந்த இசையின் இனிய நாதம், திடீரென நின்றுவிட்டது! மகுடியின் .நாதத்தைக் கேட்டுத் தன்னை மறந்து படமெடுத்தாடும் நாகம் அதே மகுடியின் நாதம் திடீரென நின்று விட்டால் தன்னையும் மீறிய ஆட்டம் கொடுத்து நிலைத்து நிற்குமோ, அது போலவே, என் நிலையும் அந்நேரத்தில் இதுவரையில், குரல் வந்த திசையைக் குறிப்பாகமனதில் வைத்து வந்த எனக்கு, இப்போது எங்கே எப்படிப் போவது என்ற ஐயம் எழும்பிற்று! இந்த இக்கட்டான நிலையில எதிரிலிருந்த கோயிலினுள்ளிருந்து, 'டக் டக' என்ற ஓசை கேட்டது, இலேசாக! மீண்டும் நிம்மதியற்ற நிலை! துணிந்து சென்றேன் ஓசைகேட்ட இடத்திற்கு. பழைய கோயில் நாலாபக்கங்களிலுள்ள மதிற் சுவர்கள் வெடித்திருந்தன! கோயிலின் கோபுரத்தை உற்று நோககினேன்: பல்லவன் காலத்தை நினைவுறுத்தியது. உள் செல்ல ஒருவித பயம் உண்டாயிற்று: இருப்பினும் ஒருவித அசட்டுத் தைரியம் வெண்ணிலவின் ஒளியில் நாலா பக்கங்களிலும் இடிந்து கிடந்த சிதைந்த சின்னங்களைக் கண்ணுறறவாறே சுற்றி வந்தேன். 'டக டக்' என்ற ஓசை இனமும் நினறபாடில்லை! இமமுறை ஓசைவந்ததிககை உன்னிப்பாகக கவனித்துககொண்டே நான் நடக்க ஆரம்பித்தேன். உன்னிப்பாகக் கவனித்தாலோ எனனவோ ஓசையின் நாதம் கேட்கவில்லை! திடீரென நின்றுவிட்டது.

என்ன ஆச்சரியம்! முதலில் இனிமையான இசை. பின், தெளிவில்லாத ஓசை! என்று சிந்தித்தவாறே நிலையற்று நின்றேன். (வரும்)

மந்த முறுவல் புரிமாதை மாயை வல்லோர் கண்டு மனத், தந்த மில்லா விறும்பூதை யடைந்தே புரியிற் புக்கன ரால், அந்த மடுத்த சும்பனைக்கண் டவர்க ளுரைப்பா ரம்புயநேர், வந்த திருக்குச் சுந்தரியை யிமயங் கண்டே மன்னவென.

கு - ரை:- மந்தமுறுவல் - புன்சிரிப்பை; மாயைவல்லோர் - மாயச்செயலில் வல்ல சண்டமுண்டர்கள். இறும்பூது - ஆச்சரியம். புரி - சும்ப நிசும்பர்களுடைய இராசதானி நகரம். அந்தம் அடுத்த - அழகு பொருந்திய. அம்புயம் - தாமரை மலர். நேர்வந்த - ஒத்த திருக்கு - கண்கள். சுந்தரியை - அழகியை. மன்ன - அரசனே.

வி - ரை:- சண்டமுண்டர்கள் சும்பனைக்கண்டு கூறும் செய்திகள் அவனுடைய அழிவுக்குக்காரணமாதலின் அந்த மடுத்தசும்பன் என்பதற்கு அழிவுசமீபத்துள்ள சும்பன் எனப் பொருள்கோடலுமாம். தாமரைமலர் தேவியின் கண்ணுக்கு உவமையாதலை 'நயனக் கருணம்புயம்' எனும் அபிராமி அந்தாதித்தொடரானும் உணர்க. 25

பின்னு முரைப்ப ரவள்சுவண பேர்விண் டாண்டி லுறைகின்றாள், அன்ன வளைநே ரிவையர்க ளகில மூன்று மிலையறிதி, கொன்னம் பெற்ற வவளைமணங் கொண்டோ னன்றோ நற்புருடன், மன்ன வினிநீ யேகியவண் மணிசே ருருவை நோக்கென்றார்.

கு - ரை:- சுவணம் - பொன்மயமாயுள்ள; பேர் விண்டாண்டில் - பெருமைபொருந்திய ஊசலில்; கொன்னம் - பெருமை. மணம்கொண்டோன் - கூடினவன். மணிசேர்உரு - அழகிய வடிவை.

வி - ரை:- பிறர்சொல்லின் அழகை முற்றுமறிதல் கூடாமையின் நீயேகி அவள்மணிசேருருவை நோக்கென்றார். மணி சேருருவை என்றதனால் அவள் உன்னால் காணற்குத்தகுந்த அழகு முற்றும் நிரம்பப்பெற்றவள் எனத்தெரிவித்தவாறும். 26

உரைக்கு மிவள்கந் தருவியுமன் றுளிர்பன் னகியு மியக்கியுமன், றிரைக்குங் கடல்சூழ் வசுந்தரையி லெழிற்றா தையினோ டுறவுமிலை, யுருகக முடைத்தோன் றினர்காப்போ ரொருவ ரேனு மிலையொருத்தி, யிருக்கும் விசனந் தனிலவளின் னெழிற்குத் தக்கா ளென மொழிந்து.

கு - ரை:— உரைக்கும் - எங்களால் சொல்லப்பெற்ற. கந்தருவி - காந்தருவ லோகத்துப் பெண். இயக்கி - இயக்கருலகத்துப்பெண். பன்னகி - நாக உலகத்துப் பெண். அன்று - அல்லள். வசுந்தரை - பூமியில். தாதையினோடு உறவுமிலை - இவளுக்குத் தந்தையும் உறவினரும் இல்லை. தோன்றினர் - உடன் பிறந்தோர். காப்போர் - காவலர். விசனம் தனில் - சனம் இல்லாத இடம். (ஒருவரும் இல்லாத இடம்.) 27

ஒளியா ரரச நன்மணிக ளோடுங்கு புழைக்கை மான சுவம், விளியா துள்ள நின்மனையின் விண்ணாட் டரசன் கரியோடு, தளிரார் பாரி சாததரு தாங்கு முச்சைச் சிரத்தகையார், கவிசே ரயமு நின்கோயிற் கண்ணே யென்று முள்ளனவால்.

கு - ரை:- அரச - அசுரராசனே; புழைக்கை மான் - யானை. நின்மனை - நின்னுடைய அரண்மனை. விளியாதுள்ள - அழியாமல் என்றும் உள்ளன. கரி - ஐராவத யானை. உச்சைச்சிரம் - உச்சைச்சிரவம் என்னும் பெயரையுடைய; தகை ஆர் - அழகுபொருந்திய. அயம் - குதிரை. கோயில் - அரண்மனை. கோவில் என்பது, கோயில் என்பதன் மரூஉ. 'திங்கள் வெண்கவிகை மன்னன் திருவளர் கோயில் நின்று' பெரிய புராணம், திருவாரூர் சிறப்பு.

இதுமுதல் ஐந்துகவிகளில் சும்பன் பெற்றுள்ள சிறந்த பொருள்களையும், அவற்றைப்பெற்றுள்ள சும்பனுக்குப் பெண்களிற்சிறந்த இவளை அடைதல் இன்றியமையாதது என்பதையும் கூறுகின்றார்கள். 28

அயன்பா லுற்ற வஞ்சமிசை யான முதலா விரத்
தினங்க, ணயமா யுளசங் கரன்றோழ னல்ல நிதியு
மூள்ளனவா, லியலுங் கிஞ்சற் கினிவாடா வெழிற்பங்
கயத்தொங் கலுமுனக்குப், பயமா ரத்தி கொடுத்துனது
பகரும் வருண னென்போனும்.

கு - ரை:- அஞ்சம இசை யானம் - அன்னங்கள் பூட்டப்
பெற்ற புட்பக விமானமும். 'அன்னத்தேரேறி அயன்வலப்
பாற் கைபோத' என்பது ஆதியுலா. முதலா - முதன்மையாகிய
நயமாய - இன்பந்தருவனவாய. சங்கரன் தோழன் - குபேரன்.
நிதி - மகாபதுமம் என்னும் நிதி. கிஞ்சற்கினி - கிஞ்சற்கினி
என்னும் பெயரையுடைய. பங்கயத் தொங்கல் - தாமரைப
பூமாலை. பயம் ஆர் அத்தி - நீர்நிறைந்த கடல். 29

ஈழ வானச் சத்திரமு மீந்தான் பிரசா பதிவையந்,
தோழ கொடுபோ வெனக்கொடுத்தான் றொலைவி றண்ட
தரனமுன்பு, வாழ நினைத்துத் கிராந்திதையா மன்னு
சத்தி யளித்தனனு, லாழி யரசன் பாசமதை யளித்தா
னிசும்பன் றனக்கும்ம.

கு - ரை:- ஈழம் வானம் சத்திரம் - பொன்னைச் சொரியும்
சீலம் உள்ள மேகம்போன்ற குடை. பிரசாபதி - உபபிரமாவாகிய
தக்ஷனவன். வையம் (தன்னுடைய) தேரை. தொலைவு இல்
தண்டதரன் - இயமன். உத்கிராந்திதை-இது உயிரை அபகரிப்ப
தாகிய இயமனிடத்துள்ள சக்தி. இச்சக்தி பிராணிகளுக்கு
மரண காலத்தில மேல் மூச்சினை யுண்டாக்கி உயிரை உடம்பி
னின்றும வேறு பிரித்து வைப்பது. ஆழி அரசன - கடலரசன்;
அதாவது, வருணன். பாசம - பாசம என்னும் ஆயுதத்தை.
வருணனுக்குப் பாசாயுதம் உண்மையை இந்நூலில் அவனுக்குப்
பாசி எனப் பெயர் கூறுதலின் அறிக.

வி - ரை:- வருணன் சத்திரம் ஈந்தான் எனக் கூட்டுக.
இயமன சும்பனால் தான் அழிவில்லாமல் வாழுதற்பொருட்டு
அவனுக்கு உத்கிராந்திதையைக் கொடுத்தான். 30

பின்னு மனையான் கடற்பிறந்த பெருமையரதனம் மளித்தான், வன்னி யுனக்குத் தழற்சௌசச் சுத்த வாச மிரண்டளித்தான், இன்ன வாறே யசுரர்குலத் திறைவ நினது லெப்பொருளு, முன்னே யடையப் பெற்றனவான மூன்று புரியி லுனக்கிணையார்.

கு - ரை:- அனையான் - அந்த வருணன். அரதனம் - அந்த இரதனங்களை. வன்னி - அக்கினி தழல் சௌசம் - அக்கினி சௌசம் என்னும் பெயரை உடைய சுத்தவாசம் இரண்டு - தூய்மையான ஆடைகள் இரண்டினை. தழல்சௌசச் சுத்தவாசம் என்றது நெருப்பினால் தூய்மை செய்யப்பெற்ற ஆடைகள் எனப்பொருள் உரைத்தலும் உண்டு. அங்ஙனம் பொருள் கொள்ளுங்கால் சௌசச சுத்தம் என்பதை ஒருபொருட் பன்மொழியாகக் கொள்க. 31

சிறந்த சான்ற வரதனங்க டிரளாய் நினது புரி மேவும், அறைந்த வொளியங் கனைமணியா லுனது நகர மழகாகும், பறைந்தே மெனச்சும பன்கேட்டுப் பதைத்தே மனத்தி லுற்றிருந்து, நிறைந்த தீரம் போயுளைந்து நிகழ்த்து வானசுக ரீவனேடும.

கு - ரை:- அறைந்த - எம்மால் சொல்லப்பெற்ற. அங் கனைமணி - பெண்மணி. பறைந்தேம - சொன்னேம். பதைத்து - காமத்தினல் துடித்து. உற்று - மயக்கமடைந்து. தீரம்போய் - தைரியம் நீங்கி உளைந்து - வருந்தி.

வி - ரை:- சிறந்த தவமணிகளைப் பெற்று விளங்குகின்ற உனது நகரம் யாம் சொல்லிய பெண்மணியைப்பெற்றால் முழு அழகையும் பெற்று விளங்குவதாகும் என்றனர் என்க. சுகரீவன - சுகரீவன் என்னும் பெயரையுடைய ஒரு அசுரன். 32

விரைவி லிவர்கூ றியநங்கை மேவு மிடத்தி னியணுகிப், பிரிய வாகனை யவட்குரைத்துப் பிறங்கு மிங்குக் கொணர்ந் திடுவாய், அரிவை மார்கட் கினிய வுரை யலது கூறல நீதியதோ, வரிய வுணர்வோய் போய்மீடி யென்று னகஞ்சேர் கொடியோனே.

கு - ரை:- இவர் - சண்டமுண்டர்கள். பிறங்கும் - இரத்தினங்களால் விளங்குகின்ற. அரிவைமார் - பெண்கள். போய் - அவள்பால் தூது சென்று. மீடி - மீள்வாய். அகம் - செருக்கு.

வி - ரை:- பிரியவாக்கு என்பதற்கு அவளுக்குப் பிரியமானவார்த்தை என்பது பொருள். தனது உயிர் பிரிதற்குக் காரணமானவாக்கு எனப் பொருள் தரலுங்காண்க. பெண்கள் மெல்லியராதலின் அவர்பால் கடுஞ்சொல் உரைத்தல் கூடாது ஆதலின் 'அரிவைமார்கட் கினியவுரை யலது கூறல் நீதியதோ' என்க. அன்றியும் வன்சொல் உரைப்பின், தன் விருப்பிற்கிணங்காள் ஆதலின் அங்ஙனம் கூறினன் எனினுமாம். 'அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க், கின்றியமையாத மூன்று.' என்னும் திருக்குறளின்படி தூதுசெல்வோன் பிறர் பெறுதற்கரிய அறிவுடையவனாய் இருத்தல் வேண்டும் ஆதலின் தான் தூதுவிடுக்கும் சுக்ரீவனை அரியவுணர்வோய் எனவிளித்தனன் என்க. 33

கொடியோன் கூற்றைச் சிரங்கொண்டு கொடிய
சிறிய படையோடும், அடியேன் போந்து வருவலென
வகன்றே யிமய வரைபுக்குக், கோடிபோன் மருங்கா
ருலகன்னையை நோக்கி யுரைப்பன் கொற்றமுறும், முடி
சேர் சும்ப தானவன்றன் றூதனென்ன மொழிகுவனால்.

கு - ரை:- கொடியோன் கூற்றை - சும்பனுடைய வார்த்தைகளை; சிரங்கொண்டு - தலைவணங்கி ஏற்றுக்கொண்டு. வருவல்- வருவேன். மருங்கு ஆர் - இடுப்பினைப்பொருந்திய. உலகு அன்னை - உலகங்களை ஈன்றருளிய பார்வதிதேவியை. தானவன் தன் - அசுரனுடைய. 34.

ஏத்து மெழிலு ரியர்திலகி யிறையாஞ் சும்ப
னாணையினைப், பூத்த போகிற் பகவன்முதற் புத்தே
ளிர்களு மிகழ்ந்துரையார், ஆத்த னுரைபோற் கொள்
வரவ னறைந்த மொழிகே ளுலகமெலாம், பாத்த தேவர்
குழுவதுவு மென்ன தேவல் பரித்திடுமால்.

கு - ரை:- நாரியர் திலகி - பெண்களில் திலகம் போன்ற வளே. போகில் பூத்த - திருமாலின் உந்தித்தாமரையில் தோன்றிய. பகவன் - பிரமா. புத்தேளிர் - தேவர். ஆத்தன் உரை - வேதம்; கடவுள்வாக்கு. பாத்த - பரவிய; குழுவதுவும்- கூட்டமும்; ஏவல்பரித்திடும் - கட்டளையைச் சிரசின்மேல் விரும்பி ஏற்கும்.

வி - ரை:- ஆத்தன் - உண்மைப்பொருளைச சொல்வோன். கடவுள். ஆத்தனுரியோன் உண்மைப்பொருளைச சொல்வோன் தருக்கசங்கிரமூலம், 52. ஆத்தன் உரை - வேதசிவாகமங்களாம, 'ஆத்தனுலுரைத்த வேதஅளவை' பரஞ்சோதி திருவிளையாடல. 'அநாதியே யமலனுய அறிவனுல் ஆகமந்தான்' என்பது சிவஞான சித்தியார். 35.

யாக பாகம் புசிப்பவனும் யானே ரத்ன பூதங்க ளாகு மெனகசே மருத்துவன்ற னழகார் கரியு மெனக்காகுந், தோக மிலபாற் கடலுதித்த துரகம் பாரி சாதமுதல், ஆகும் பொருளுங் கந்தருவா திகட்குள் ளனவு மெனககாமால்.

கு - ரை:- யாக பாகம - அவிர்ப்பாகம் பூதங்கள் - கூட் டங்கள். ஆகும - உரியதாகும. மருத்துவன் - இந்திரன். கரி - ஐராவதம், தோகம - குறறம, துரகம - உசசைசசிரவம. பாரிசாதம் முதலாம பொருள் - பாரிசாதம கற்பக விருக்ஷம் காமதேனு சிந்தாமணி ஆகியவைகள். கநதருவாதிகள் - கந்தரு வர் முதலிய தேவசாதிகள். உள்ளனவும் - உள்ளனவாய சிறந்த பொருள்கள்.

வி - ரை:- யாகத்தில் தேவர்களுக்குத் தனித்தனியே கொடுக்கப்படும் யாக பாகத்தைச சுமபன் தன்னுடைய அதிகாரத்தால் தனககே கொடுக்குமாறு செய்திருநதான் ஆதலின், யாகபாகம் புசிப்பவன் யானே என்றான். 36

தெரிவை மணியே யரதனங்கள் திரளாய்ப் புசிப்போர் யாமன்றோ, வுரிமை யிதனு னீயுமிவ ணுறுதற் குரியா யுறறபினர்க, கரையு மெனையே னும்மனுசக் காவற் புரிவோன் றனையேனும், விரைவின் மணந்து பெருஞ்செல்வ மேவி யிருப்பா யெனவு ரைத்தான்.

கு - ரை:- தெரிவை - பெண். புசிப்போர் - அனுபவிப் போர். உரிமை இதனுல் - இரத்தினங்களை அனுபவிக்கும் இவ்வுரிமையினுல். நீயும - பெண்மணியாகிய நீயும. இவண் உறுதற்கு - யாம் வசிக்கும இவவிடததில் இருத்தற்கு. கரையும் - சொல்லுகின்ற; அல்லது, மனங்கரைகின்ற. அழிய இருக்கின்ற எனினுமாம். அனுசன் - தமபியாகிய. காவற்புரிவோன் - நிசுமபன். 37.

என்னச் சும்பன் வாணியினைச் சுக்கி ரீவ னிசைத்திடவே, உன்னித் தேவி புன்னகைசெய் துரைப்பள் முன்புன மதியாலே, யென்னைச் சமரில் வென்றுதர்ப்ப மிடித்தோ னெனது நாயகனென், அன்ன சபத மொழிபொய்யா வனைய வீர ரிவணெய்தி.

கு - ரை.- என்ன - என்று; சும்பன் வாணியினை - சும்பன் கூறிய வார்த்தைகளை, முன் - முன்பு; புன்மதியால் - என்னுடைய அற்பபுததியினுல். தர்ப்பம - கர்வம அல்லது கொழுப்பு. இடித்தோன் - போக்கியவனே என் அன்ன சபதம் - (எனக் கொண்ட) என்னுடைய அந்தப்பிரதிஞ்ஞை பொய்யா-பொய்யா காதபடி. அனைய வீரர் - அநதச சுமபநிசுமபர்கள். 38.

சமரம் புரிந்தே யெனைவென்று தர்ப்ப மடக்கி யெனைகொண்டே, யிமையி லேக வவரோடு மிசைப்பா யென்ன வுமைமொழியக, கமையில சுகளன் கேட்டுமனங் கன்றி நினது பிரதிஞ்ஞை, யமையு மவரோ டமர்புரிய யாவருளர்மூ வுலகத்தும்.

கு - ரை:- உமை - தேவி. க்ஷமை - பொறுமை. சுகளன்: நல்ல கழுத்தை யுடையவன்; சுக்ரீவன். கன்றி - கோபித்து. 39

நீயோ வொருத்தி யிவ்வுரைக ணிகழ்த்த லாலே
யுனையெவரும், பேயாய் மதிப்ப ருனது குழல் பிடியா
முன்ன நீவருதி, யோயாப் புகழ்வந் துறுமென்ன வுன்னு
துரைத்த சபதமொழி, வேயாய் வந்த மடவோனே
விரைவில் வேந்தன் பாற்சென்று.

கு - ரை:- ஒருத்தி - ஒருத்தியாயிருக்கின்றாய், இவுரை - இந்த வீரமொழிகளை. குழல் - கூந்தல். வருதி - வருவாய், என்ன - என்று சுக்ரீவன் சொல்ல, மேல் வருவன தேவி கூற்று. உன்னாது - யோசிக்காமல். வேயாய் - தூதனாக.

வி - ரை:- ஒருத்தியாய் இருந்து தேவி சும்பநிசும்பர்கள் தன்னைப் போரில் வென்று போகட்டும் என்று கூறலின் அவளை அறிவற்றவள் என்று கருதி 'உனையெவரும் பேயாய் மதிப்பர்'. 'உனது குழல் பிடியா முன்னம் நீவருதி' என்றதனால் நின் மயிரைப்பிடித்து இழுத்தலால் நீங்கப்பெற்ற புகழ் உடையவளாய் நீவரவேண்டாம் என்பது குறிப்பு. 'உன்னாது உரைத்த சபத மொழி' என்றதனால், தேவி சும்பனைப் பரிகசித்தமை தோன்றும். தூதனை 'வேய்' என்று கூறலின் ஒற்றறிதலும் அவனுக்கு உரிய தொழில் போலும். தூதனாக வந்த சுக்ரீவன் தேவியின் இயல்பையறியாது தகாத சொல்லினன் ஆகையின் அவனை 'வேயாய் வந்த மடவோனே' என்றனள். 40

எனது கூற்றினி கூறி லியல வேண்டு மதுசும்பன்,
மனதி னோர்ந்து புரிவனென்றன் னுன்னு சபத
மொழிபொய்யாத், தனைவி லேகென் றனளம்மை
சுதையாம் பஞ்ச சருக்கமிவண், வினைவென் றவரே
முடிந்ததினி மேலாங் காதை சாற்றுவனால்.

படுப எனப் பன்மை கூறிய அதனான், அவ்விளி தான் ஈறு திரிதலும், ஈற்றயல் நீடலும், பிறிது வந்தடைதலும், இயல்பாதலும் என நான்குவகைப்படும் என்பது பெறப்பட்டது. தெளிய என்றதனான் விளிதன்னை எழுவாயின் வேறுபாடதன்றி வேறோர் வேற்றுமை என்பாரும் உளர் என்பதூஉம், இவ்வாறு ஓர் வேற்றுமையாக நேர்ந்தார் என்பதூஉம் பெறப்பட்டது. (க)

அவ்வே,
இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப. 122.

என் - எனின், மேற்சொல்லப்பட்டவற்றை இனிச் சொல்லுப என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: மேல் விளி யேற்பனவும் ஏலாதனவும் எனச் சொல்லப்பட்டவற்றை இவை என அறியும்படி வழக்குக்குத் தழுவ எடுத்தோதுப ஆசிரியர். அதனான் யானும் அம்முடிபே கூறுவல் என்பது. இது மொழிவாம் என்னும் தந்திரவுத்தி.

மற்றஃதாமாறு என்னை, கிளப்பல் என்னாது, கிளப்ப என்றமையின், முதனூலுள் அவ்வாறு கூறும் என்பதன்றே பெறுவது எனின், சொற்கிடையாது எனினும் ஆண்டுக் கூறியவாறு போல யானும் ஆண்டுக் கூறுவல் என்பது கருத்தாகக் கொள்க. இனி, கிளப்ப என்பதனைப் பெயர்ப்படுத்துக கூறலும் ஒன்று. (உ)

அவைதாம்,
இ உ ஐ ஓ என்னும் இறுதி
அப்பால் நான்கே உயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே. 123.

என் - எனின், உயிரீற்று உயர்திணைப் பெயருள் விளியேற்பன இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: மேல விளியேற்கும் எனப்பட்டவைதாம் இ, உ, ஐ, ஓ என்று சொல்லப்பட்ட ஈறுகளையுடைய அக்கூற்று நான்கு பெயரே உயர்திணையிடத்து மெய்ப் பொருளினைச் சுட்டிய விளியினைக் கொள்ளும் பெயராவன என்றவாறு.

உயிரீற்று உயர்திணைப் பெயர்களுள் விளியேற்பன இந்நான்கும் எனவே ஒழிந்த உயிரீறு விளியேலா என்பதூஉம் இதனாற் பெறாம். உயிரீறு பன்னிரண்டும் உயர்திணைப் பெயர்க்கு ஈறாமோ எனின் அஃது ஈண்டு ஆராய்ச்சி யன்று; ஈறாவனவற்றுள் விளியேற்பன இவை என்றவாறு. மக என்னும் அகரவீறும், ஆடூஉ மகடூஉ என்னும் உகரவீறும் இருதிகரன விளியேலாதன எனக்கொள்க. மெய்ப்பொருள் சுட்டிய என்றதனன், இவ்வீற்று அஃறிணைப்பெயர்களும் இவ்வுயர்திணைபோல விளியேற்பன என்பது கொள்ளப்படும். அவை தும்பி தும்பீ எனவும், முல்லை முல்லாய் எனவும் வரும். (கூ)

அவற்றுள,
இ யாகும் ஐ ஆய் ஆகும். **124.**

என் - எனின், மேற்சொல்லப்பட்ட நான்கனுள்ளும் இகரவீறும் ஐகாரவீறும் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: மேற்சொல்லப்பட்ட நான்கீற்றுப் பெயருள்ளும் இகரஈற்றுப் பெயர் ஈகாரமாய் விளியேற்கும்; ஐகார ஈற்றுப்பெயர் ஆயாய் விளியேற்கும் என்றவாறு.

உ - ம்: நம்பி - நம்பீ, நங்கை - நங்காய் எனவரும். இவை ஈறுதிரிதல். (ச)

ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும். 125.

என் - எனின், ஒழிந்த இரண்டு ஈறும் விளி ஏற்கு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஓகார ஈற்றுப் பெயரும் உகர ஈற்றுப் பெயரும் ஏகாரத்தோடு பொருந்தி விளியேற்கும் என்றவாறு.

உ - ம்: கோ - கோவே எனவும், வேந்து - வேந்தே எனவும் வரும். இவை பிறிது வந்தடைதல். (ரு)

உகரந் தானே குற்றிய லுகரம். 126.

என் - எனின், ஐயமறுத்தல் நுதலிற்று; என்னை மேல் இ உ ஐ ஓ என்புழி இன்ன உகரம் என்றுதெரித்துக் கூறாமையானும், உடன் ஓதப்பட்ட எழுத்துக்கள் முற்று இயலபினவாதலும், இன்ன உகரம் என்பது அறியாது ஐயுற்றான் ஐயந்தீர்த்தமையின் என்பது.

இ - ள்: மேற் கூறப்பட்ட உகரந்தான் முற்றியலுகரம் அன்று குற்றியலுகரமாம் என்றவாறு. (சு)

ஏனை உயிரே உயர்திணை மருங்கில்
தாம்விளி கொள்ளா என்மனார் புலவர். 127.

என் - எனின், வேண்டா கூறி வேண்டியது முடித்தலை உணர்த்தல் நுதலிற்று. என்னை, வேண்டா கூறிய வாறு எனின், அவைதாம் இஉஐஓ என்புழி இநான்கு ஈறும விளியேற்கும ஒழிந்த உயிரீறு விளியேலா என்பது பெற்றமையின் என்பது. இனி வேண்டியது முடித்தவாறு என்னை யெனின், ஒழிந்த உயிரீறு வேற்றுமை ஏலா என்று இன்னுமேற் சொல்லிய உயிரீறு விளியேற்கும என்றமையின.

இ - ள்: மேற்கூறிய நான்கு உயிரீறே யன்றி ஒழிந்த உயிரீறுகள் உயர்திணைப் பெயரிடத்துத் தாம் விளித்தலைக் கொள்ளா என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

இவ்விதி மேலே பெறலுமன்றோ எனின், மேற் கூறியவாறன்றி விளியேற்கும் என்பது கருத்தெனக் கொள்க. கணி - கணியே என இகரவீறு ஏகாரம் பெற்றது. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (எ)

அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்
இயற்கைய வாகும் செயற்கைய என்ப. 128.

என் - எனின், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று; எனை ஈகாரமாதல் விலக்கி இயல்பாய் விளியேற்கும் என்றமையின்.

இ - ள்: அளபெடுத்தலான் மிகுகின்ற இகரமாய இறுதியையுடைய பெயர் இயல்பாய் விளியேற்கும் செய்தியையுடைய என்றவாறு.

உ - ம்: *தொழீஇஇ தொழீஇ என்பது பெயர். விளியும் அஃதே எனக் கொள்க. இஃது இயல்பு.

இயற்கைய என்று பன்மை கூறிய அதனான் இவ் வளபெடை மூன்று மாத்திரையில் நிமிர்ந்து நிற்கும் என்று கொள்ளப்படும். செயற்கைய என்றதனை இவ்வளபெடைப் பெயர் எழுதும்வழி ஐந்தெழுத்திட்டு எழுதுக என்று கொள்ளப்பட்டது. (அ)

முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி
ஆவொடு வருதற் குரியவும் உளவே. 129.

---

*தொழீஇஇ - காணடறவொழிலை யுடையவளே, கலி. 103. 40 வரி. நச, உரை.

என் - எனின், மேற்சிறப்புவிதி வகுத்தலை நுத லிற்று; முறைப்பெயரிடத்து ஐகாரவீறு ஆயாய்விளி யுருபேற்று வருதலே அன்றி 'ஆ' வாயும விளியேற் கின்றமையின.

இ - ள்: முறைப் பெயரிடத்து ஐ என்னும் ஈறு ஆயொடு வருதலேயன்றி ஆவொடுவருதற்கு உரியனவும் உள என்றவாறு.

உ - ம்: அன்னை - அன்னா என்றும், அத்தை - அத்தா என்றும் வரும். உம்மை எதிர்மறை. அதனான் ஆயாதலே பெருமபானமைத்து. மற்றிவை விரவுப் பெயர்களை உயர்திணைப் பெயர்களோடு மாட்டெறியும ஆதலானும் அமமாட்டேறறிற்கு ஏற்ப உயர்திணைப் பெயர்களுள் இவ்வாறு விளியேற்பன இன்மையானும் ஆண்டுக கூறறபாலதனை ஈண்டுக கூறியது எனக் கொள்க. (கூ)

அண்மைச் சொல்லே இயற்கை யாகும். 130

என் - எனின், எய்தியது விலககிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று; மேற்கூறியவாறன்றி இன்னுழி இயலபாம என்கின்றமையின்.

இ - ள்: மேற்கூறிய உயிரீறு நான்கினையுமுடைய அணியாரைக கூவும சொற்கள் மேற் கூறியவா றன்றி இயலபாய் விளியேற்கும என்றவாறு.

உ - ம்: நமபி வாழி, நங்கை வாழி, வேந்து வாழி, கோ வாழி எனவரும. (௧0)

னரலள என்னும் அந்நான் கென்ப
புளளி இறுதி விளிகொள் பெயரே. 131

என் - எனின், உயர்திணைக்கண் உயிரீறு விளி யேற்பன இவை என்பது உணர்த்தி இனி இவ்வுயர் திணைக்கண் புள்ளி ஈறு விளியேற்பன இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ன ர ல ள என்று சொல்லப்பட்ட அந் நான்கு ஈற்றுப் பெயரும் என்று சொல்லுப ஆசிரியன், புள்ளியீற்றினை உடைய விளித்தலைக்கொள்ளும் உயர் திணைப் பெயராவன என்றவாறு.

புள்ளியீற்றுள் இவை கொள்ளும் எனவே ஒழிந் தன விளிகொள்ளா என்பதூஉம் பெற்றும்.

உ - ம்: பொருந, பாண எனவும் எல்லாரும் என வும் இவை முதலாயின விளி ஏலாதன எனக்கொள்க.

ஏனைப் புள்ளி ஈறுவிளி கொளலா 132

என் - எனின், வேண்டா கூறி வேண்டியது முடித் தலை உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: மேற் சொல்லப்பட்ட நான்கும் அல்லாத புள்ளியீறு உயர்திணையிடத்து விளித்தலைக் கொள்ளா என்றவாறு. மற்று இவ்விதி மேலே பெற்றும் அன்றே எனின், மேற்சொல்லிய நான்கு புள்ளியீறும் இனிக் கூறுமாறு போலாது விளியேற்றலும் உடைய என் றற்கு மிகைபடக் கூறப்பட்டது எனக் கொள்க.

உ - ம்: னகர ஈற்றுள் மேலோதுகின்ற அன்னீ றும் ஆனீறும் அல்லாத னகர வீறு தம்முன் தம முனனே எனவும் நமமுன, நமமுன்னே எனவும் விளி யேற்றது. ரகர ஒற்றுள் ஓதுகின்ற அர்ஈறும் ஆரீறும் அல்லாத இர் ஈறு பெண்டிர், பெண்டிரே என ஏகாரம் பெற்றும் கேளிர், கேளீர்என இயல்பாயும் விளிஏற்றது.

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. இன்னும் இம்மிகை யானே ஏனைய புள்ளியுளளும சிறுபானமையாவனவுள *'விளங்கு மணிகொடும் பூண் ஆஅய்' என யகர ஈறு இயல்பாய் விளி ஏற்றது. பிறவும வந்தவழிக கணடு கொள்க.

அவற்றுள,

அன் என் இறுதி ஆவா கும்மே. 133

என் - எனின, மேல் நிறுத்த முறையானே, னகர ஈறு விளியேறகுமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: அந்நான்கு புள்ளியுள்ளும் னகர ஈற்று அன் என்னும் பெயரின் இறுதி ஆவாய் விளியேற்கும் என்றவாறு.

உ - ம்: சோழன் - சோழா, சேர்ப்பன் - சேர்ப்பா எனவரும. (கந)

அண்மைச் சொல்லிற் ககரம் ஆகும். 134

என் - எனின், எய்தியது விலககிப் பிறிது விதி வருதல் நுதலிறறு.

இ - ள்: அவற்றுள் அன் ஈறு அணியாரை விளிக் குஞ்சொல்லிடத்து அகரமாகும் என்றவாறு.

உ - ம்: சோழன் - சோழ, சேர்ப்பன் - சேர்ப்ப எனவரும. (கச)

ஆனென் இறுதி இயற்கை யாகும். 135

என் - எனின், னகர ஈற்றுள் ஒருசாரன விளி ஏற்குமாறு உணர்த்தல் நுதலிற்று.

---

*புறம். 130: 1.

இ-ள்: ஆன் என்னும் னகர இறுதிப் பெயர் இயல்பாய் விளியேற்கும் என்றவாறு.

உ-ம்: சேரமான், மலையமான் எனவரும். (கரு)

தொழிலிற் கூறும் ஆனென் இறுதி
ஆயா குமமே விளிவயி னான. 136.

என்-எனின், எய்தியது விலக்கிப் பிறிது விதி வருத்தல் நுதலிற்று.

இ-ள்: ஒருவன் செய்யும் தொழில் ஏதுவாகக் கூறப்படுகின்ற ஆன் என்னிறுதிப்பெயர் விளியேற்கு மிடத்து ஆயாகும் என்றவாறு.

உ-ம்: உண்டான் - உண்டாய். நின்றான் - நின்றாய் எனவரும். (கசு)

பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே. 137

என-எனின், இதுவும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வருத்தல் நுதலிற்று.

இ-ள்: அவற்றுள பண்பு தனக்குப் பொருண்மை யாகக்கொண்ட பெயரும் மேற்கூறிய தொழிற்பெயரோடு ஒருதன்மைத்து என்றவாறு.

உ-ம்: கரியான் - கரியாய், செய்யான் - செய்யாய் எனவரும். (கஎ)

அளபெடைப் பெயரே அளபெடை இயல. 138.

என்-எனின், எய்தாதது எய்துவித்தல நுதலிற்று.

இ-ள்: அவ் ஆனீற்று அளபெடைப் பெயர் மேற் கூறிய இகரவீற்று அளபெடைப் பெயர்போல இயல பாய் விளியேற்கும் என்றவாறு.

हर्तुं त्वमेव भवसि त्वदधीनमीशे
संसारतापमखिलं दयया पशूनाम् ।
वैकर्तनी किरण संहति रेवशक्ता
घर्मं निजं शमयितुं निजया हि वृष्ट्या ॥

என்னும் இதனால் பசு பாச பதிகளின் இலக்கணமும் சித்தாந்தம் போலவே தெளிவாம்.

भोगाय देवि भवतीं कृतिनः प्रणम्य
भ्रूकिङ्करीकृत सरोजगृहा सहस्रम् ।
चिन्तामणि प्रचयकल्पित केलिशैले
कल्पद्रुमोपवन एव चिरं चरन्ति ॥

எனவும் பிறவும் வருமாற்றான் உணர்க. மற்றும் விரிவிற் கண்டு கொள்க. இதன் மறையில் "இறைமுதலதற்குத் தபனனெனக்கதிர்க்கு" என்றதற்கு வருமாறு:—

प्रभया तु विना यद्वद्भानुरेव न विद्यते ।
विना शक्त्या तया तद्वत् शिवोऽयं न विद्यते ॥
अपि धर्मी शिवः प्रोक्तो धर्मः शक्तिरितीर्यते ।

இதனானேயன்றே,

शक्तिः शरीरमधिदैवतमन्तरात्मा
ज्ञानं क्रिया करणमासनजालं मिच्छा ।
ऐश्वर्यमायतन मावरणानि च त्वं
किं तन्न यद्भवसि देवि शशाङ्कमौलेः ॥

எனச் சிவன் சுவாமி, சத்தி சுவம் எனக் கூறியவாறும் என்க. இனி, விசுவமெல்லாஞ் சத்தி வடிவமாயிற்

றேன்றி நசித்தலால் கெடுமென்பதன்றியுரனுடையோர் நவினெறியும் கெடும்' என்றது, சிவஞானபோதத்தில்,

अदृश्यं चेदसद्भावो दृश्यं चेज्जडिमा भवेत् ।

என்றதுபற்றி. ஆயின்,

व्योमेति बिन्दुरिति नाद इतीन्दुरेखा
रूपेति वाग्भवतनूरिति मातृकेति ।
निष्यन्दमानसुखबोध सुधास्वरूपा
विद्योतसे मनसि भाग्यवतां जनानाम् ॥

என்றாற்போல வருவதென்னையோ எனின் அஃது உபாசனாவிஷயம். அன்றி,

यामामनन्ति मुनयः प्रकृतिं पुराणीं
विद्येति यां श्रुतिरहस्य गिरो गृणन्ति ।
तामर्धपल्लवितशङ्कर रूपमुद्रां
देवीमनन्यशरणः शरणं प्रपद्ये ॥

எனவும்,

विद्यां परां कतिचिदम्बरमम्ब केचि
दानन्दमेव कतिचित्कतिचिच्च मायाम् ।
त्वां विश्वमाहुरपरे वयमामनामः
साक्षादपारकरुणां गुरुमूर्तिमेव ॥

எனவும் வந்ததூஉம் அதிட்டிக்கும் தன்மையாலும் வியாபகத்தினாலும் முன்கூறியவாறே வழிபாட்டினாலும் சத்தியின் ஆற்றலை வெளிப்படுப்பதன் மேற்று; இதனானேயன்றே 'சிலர்' என்று விகற்பித்துக் கூறியது, பிறவும் விரித்துணர்க. 7.

8. * * *

"பகருமா மந்திரங்கள்" என்பது மந்திரவாமி மதமும் மறுப்பும. பொருள்வெளி. இம்மதம் வருமாறு:— சர்வசித்தாந்த விவேகததில்,

अथातो मन्त्रवादश्च सङ्ग्रहेण निगद्यते ।
मन्त्रोपासनया मुक्तिः सह प्रागुक्तवर्त्मना ॥
नमः स्वाहा स्वधावौषट् वषड्ढुं फड्विभेदतः ।
सप्तकोटि महामन्त्राः सर्वकृत्य विधायिनः ॥
साक्षाच्छक्ति स्वरूपास्ते नत्वन्येच, तथा वचः ।
यननं सर्ववेदित्वं त्राणं संसार्थनुग्रहः ॥
मनन त्राणसंयोगान्मन्त्र इत्यभिधीयते ।

இச்சுலோகத்தில் சத்தி என்னும் சொல் எஞ்சிநின்றது.

इत्यतोऽपि स्फुटं तस्मान्मन्त्रज्ञानपुरःसरम् ।
मन्त्रोपासनया मुक्तिर्मन्त्रवादे निरूपिता ॥

என்பது. இதன் மறை தானே விளங்கும். (8)

9. * * *

"மந்திரமும் தந்திரமும்" என்பது இயந்திர வாமி மதமும் மறுப்பும் கூறுகின்றது. இதன் பொருள்வெளி. மறுப்பினோ .... வழிவருதலினோ லென்றது மந்திரவாதியொருவன் கற்பித்த ரேகையாய் வருதலினால் என்றவாறு. இம்மதம் சருவசித்தாந்த விவேகத்தில்,

अथातो यन्त्रवादेतु वामतन्त्रोक्तवर्त्मना ।
तद्यन्त्रसेवया सर्वं सिद्ध्यतीति विनिश्चयः ॥
सर्वत्रापि विना यन्त्रं मन्त्रभेदेन किं फलम् ।

तन्त्रभेदेन वा तस्मात्सर्वं यन्त्रेण सिद्ध्यति ॥
अणिमा महिमा चैव गरिमा लघिमा तथा ।
ईशत्वं च वशित्वं च प्राप्तिः प्रकाम्यमेव च ॥
ततोऽन्ये सिद्धिभेदाश्च कथ्यन्ते कर्षणं पुनः ।
मोहनं च तथा चोच्चाटनं स्तम्भनमेव च ॥
मारणं च तथा विद्वेषणं भेदनमित्यपि ।
लोकान्तरेषु भोगश्च मुक्तिश्चेति विनिश्चयात् ॥
साक्षाच्छक्तिस्वरूपं तद्यन्त्रमेवात्र सेव्यते ।
तदङ्गत्वेन मन्त्रादि सेवातुल्यं च सम्मतम् ॥

என்பது. (9)

10. * * *

"வரையுமியந் திரமாதி கருதவேண்டா" என்பது ஔஷதவாதி மதமும் மறுப்புங் கூறுகின்றது. ஈண்டு மறுப்பில் முத்தி நெறியுணர்வென்றது தின்பண்டம் காயம் பொன்றுதலால் என்றது அவன்நித்தியமென்ற தற்கு மறை. மற்றனைத்தும் வெளி. இம்மதம் சருவ சித்தாந்த விவேகத்தில் வருமாறு:—

अथात्रौषधवादे तु सर्वमौषध सेवया ।
साध्यमेवेति सिद्धान्तस्तद्धि शक्तात्मकं मतम् ॥
ततस्तन्त्रसंसिद्ध कायकल्पादि सेवया ।
मण्डलाद्युक्तकालेन जननादिश्च नश्यति ॥
देहकान्तिर्महत्वं च देहस्य (नियतं) भवेत् ।
आकाश गमनादिश्च सिद्धिर्मुक्तिश्च सिद्ध्यति ॥
किं फलं मन्त्र यन्त्रादिसेवयेति विनिश्चितः ।

எனபது. (10)

11. - - *

"அன்றே நல்வினை" என்பது கருமவாமி மதமும் மறுப்பும் கூறுகின்றது. ஈண்டு எனறு மென்றது முத்திநிலை. மற்றனைத்தும் வெளி. இம்மதம் சருவ சித்தாந்த விவேகத்தில் வருமாறு:—

अथातः कर्मसिद्धान्ते सर्वं कर्मवशादिति ॥
औषधेन तथा यन्त्रमन्त्रजातैश्च किं फलम् ॥
जातं क्षयं सुखं क्लेशं वार्धकं मरणं तथा ।
एवमुक्तं तु षट्कं च ग[त]संकल्पनिश्चयम् ॥
जन्मारोग्यं श्रुतं श्रीजनितमथ यशो बन्धुदाराश्च पुत्रा
भृत्याःक्षेत्रंगृहाःस्युर्वितरणमपि गीर्देहकान्तिर्महत्त्वम् ।
प्रीति र्मित्रं सखायः शुभमपि च विपत्काल मृत्युर्नराणां
पूर्वाभ्यासानु रूपं विधिविहित वशादेति कालं प्रपद्ये ॥
इत्यतो हि नवीनैः किं स्वप्रयत्नैस्तथाविधैः ।
अत एव तथा लोके शास्त्रेष्वपि च विश्रुतम् ॥
भवितव्यं भवत्येव नालिकेरफलाम्बुवत् ।
गन्तव्यं गच्छति सदा गजभुक्तकपित्थवत् ॥
कुब्जं च काणं विकलं च पङ्गुं
मूकं च मूर्खं मतिविभ्रमं वा ।
देवानुकूलेन वृणोति सम्प-
न्न पौरुषं कुत्रचिदस्ति कान्ते ॥
इदं मया प्राप्तमिदं प्रपत्स्ये
इदं करोमीति वृथा जनोऽयम् ।
वदत्यहोऽज्ञानवशोऽनवद्ये
न पौरुषं कुत्रचिदस्ति कृत्ये ॥

सपुत्रदारः सपशुर्धनाढ्यः
सामर्थ्यतोऽस्मीत्यवपद्यते यः ।
स विप्रकर्षे किमुपैति शोकं
द्विपात्पशुर्ज्ञानबहिष्कृतश्च ॥
इति सञ्चित्य कर्मानुसारिणी बुद्धिरित्यतः ।
न्यायादेव यथा बुद्धिर्यत एव प्रवर्तते ॥
तथा तत्र प्रवृत्तः सन्नान्यथा कुत्रचित्स्वयम् ।

सुखदुःखादि विषये नालसो मुक्तिभाग्भवेत् ॥
इत्येवं कर्मवादश्च कथितः सङ्ग्रहेण तु । (11)

12. * * *

"ஞானவடிவாஞ் சித்தி" என்பது அத்துவிதவாமி மதமும் மறுப்பும் கூறுகின்றது. இது தானேபொருள் விளங்கும். அது வருமாறு.— சர்வசித்தாந்த விவேகத்தில்,

अद्वैतवादिपक्षे तु सर्वं शक्तिविवर्तकम् ।
तथा शक्तिविवर्तेन विना किञ्चिन्न दृश्यते ॥
कर्म माया च लोकश्च तथा जीवेश्वरौ शिवः ।
पशुपाशादि सर्वं च विना शक्त्या न हि स्फुटम् ॥
इति विज्ञानमात्रेण मुक्त एव भवेन्नरः ।
ब्रह्महा मद्यपः स्तेयी त्वगम्यागमनोऽपि सः ॥
कुतो वा कर्मणा मुक्तिस्तथैव श्रूयते वचः ।
ज्ञानादेव हि कैवल्यं नान्यथा कर्मकोटिभिः ॥
नाभुक्तं क्षीयते कर्मकल्पकोटिशतैरपि ।

इत्यादिवचनं सर्वमज्ञानिविषयं मतम् ॥
एवमद्वैतसिद्धान्तो वामभेदे निरूपितः ।

என்பது. (12)

13. * * *

"திகழ்ந்த பராசக்தியை" என்பது துவித வாமி மதமும் மறுப்பும் கூறுகின்றது. பொருள் வெளி. அது சர்வசித்தாந்தவிவேகத்தில் சொல்லப்பட்டது.

द्वैतवामागमे सिद्धः पदार्थस्त्रिविधो मतः ।
शक्तिः पशुश्च पाशश्च नत्वेका शक्तिरित्यथ ॥
आत्मा च शक्तिवत्साध्यस्ततः सर्वज्ञतादिमान् ।
अनादौ मले सम्बन्धात्तज्ज्ञानादि न राजते ॥
तथा ज्ञानादिसंसिद्धौ शाक्तदीक्षापुरःसरम् ।
गुरोरेव मुखात्प्राप्ततन्त्रज्ञानपरायणः ॥
चर्ययावाथ योगेन पूजादिक्रियया पुनः ।
उपास्त्या शक्तिभेदानां साक्षाच्छक्तेरतोऽथवा ॥
मुक्त एव भवेन्नायं केवलेन तु कर्मणा ।
विज्ञानेन च मुक्तात्मा शक्त्या च भ्राजते सदा ॥
मुक्तौ सुनिर्मलः सर्वज्ञता धर्मादि संयुतः ।
इत्येवं द्वैतवामाख्ये सिद्धान्तश्च निरूपितः ॥

என்பது. (13)

14 * * *

'அரனறிவு" என்பது மிச்சிரவாமி மதமும் மறுப்பும் கூறுகின்றது. இதுவும் வெளி. அது சர்வசித்தாந்த விவேகத்திலே சொல்லப்பட்டது.

अथातो मिश्रवामे तु पृथक्त्वेऽपि परस्परम् ।
त्रयाणां च पदार्थानां व्याप्त्या तस्याश्च शक्तितः ॥

सर्वेषां मिश्रसिद्धान्ते सर्वं शक्तिमयं स्मृतम् ।
शिवश्च तस्य देहश्च ज्ञानावरणमेव च ॥
तथात्मा तस्य देहादि तदेवं भुवनानि च ।
शक्तिरूपमिति ज्ञात्वा शाक्ततन्त्रोक्तवर्त्मना ॥
साध्या च मधुमांसादिसंपादनपुरःसरम् ।
पूजया होमतोवाथ जपेन ध्यानतः पुनः ॥
शक्त्युपासनया मुक्तिर्मुक्तः शक्त्यात्मको भवेत् ।
न शक्तेर्भिन्न एवायं शक्त्या मिश्रो यतः पुनः ॥
न समश्चभवेच्छक्त्या तथानेकेशवादतः ।
इत्येवं मिश्रवामे तु तदर्थोऽपि निरूपितः ॥

என்பது.

15. * * *

"தாங்கு மாதார சக்தி" என்பது சித்தாந்தவாமி மதமும மறுப்பும் கூறுகின்றது. பொருள்வெளி. இம் மதம் வருமாறு— அதிலேயே,

अथातो वामसिद्धान्तः सङ्ग्रहेण निरूप्यते ।
वामाद्यष्टागमप्रोक्तमङ्गीकृत्य यथोचितम् ॥
प्रत्यक्षादीनि मानानि प्रागुक्तान्येव तानि वै ।
शक्तिश्च पशुपाशौ च पदार्थस्त्रिविधो मतः ॥
अनन्या शक्तिरन्येषां सर्वेषां व्याप्तितो मता ।
वामादिषु च सर्वेषु कृतकृत्योऽत्र साधकः ॥
तीव्रतीव्रतरत्वेन शक्तिपातेन संयुतः ।
शाम्भवीदीक्षया मुक्तः सदुपाय बलेन च ॥
सदुपायस्तु सन्मार्ग ज्ञानयोगादिकः स्मृतः ।
आधाराद्या बहुविधा सा ह्यनुग्रह रूपिणी ॥
ध्येयाऽऽदित्यादिवद्ध्यानात् सा शक्तिः पारमेश्वरी ।
इत्येवं वामसिद्धान्तः सङ्ग्रहेण समीरितः ॥

என்பது.

சைவசித்தாந்தம் (ஆங்கிலம்)

சைவசித்தாந்தம் உலகமதம் எல்லா மதத்துவங்களையும் தனக்குப் படிமுறையாகக்கொண்டு விளங்குவது. இதனை வடநாடுகளிலும் பரப்பவேண்டும் என்ற பெருநோக்கங்கொண்டு திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள் வடநாட்டுப் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் சொற்பொழிவுசெய்யத் தக்க ஏற்பாடு செய்துள்ளார்கள். அதன் சார்பாகச் சென்ற ஆண்டு தொன்றுதொட்ட சைவசித்தாந்தத் தொண்டரும், சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசியாக இருந்தவர்களுமாகிய திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் அனுப்பப்பெற்றார்கள். அவர்களுடைய காசி இந்து சர்வகலாசாலைச் சொற்பொழிவுகளும், அலகாபாத் சர்வகலாசாலைச் சொற்பொழிவுகளும் புத்தகரூபமாக வெளிவந்திருக்கின்றன. சைவசித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவங்கள் மிக அழகாக விளக்கப்பெற்றுள்ளன. முக்திநிலை மொழியப்பெற்றுள்ளது. இத்தகைய அருமையான கருத்துக்களை எளிய இனிய ஆங்கிலநடையில் எழுதியிருப்பது மிகவும் போற்றத்தக்குரியது. கிரௌன்சைஸ் 56 பக்கங்கள், போஸ்டேஜ் உள்பட விலை 1—6—0 [கிடைக்குமிடம்:— ம. பாலசுப்பிரமணிய முதலியார், 150. கோவிந்தப்பநாயக்கன்தெரு, ஜி. டி. மதராஸ். 1]

பாடும் கீதம் கேட்குது

இக்காலத்து இசைத்தமிழ் வளர்ச்சிக்கு இனிய பாடல்கள் பல இயற்றப்படுகின்றன. அவற்றுள் மொழிவளத்தோடு - தமிழ்ப்பண் பாட்டோடு அமைவன சிலவே. அவற்றுள் முன்னணியில் நிற்பது நமது என். எஸ். சிதம்பரம் அவர்கள் பாடல்கள். முன்னரே இசைக்கனியை நமது அன்பர்கட்கு அறிமுகம் செய்துவைத்திருக்கிறோம். இப்போது ‘ பாடும் கீதம் கேட்குது ” பாருங்கள். இதன்கண் பாடல்களனைத்தும் முழுமுழுதும் தமிழ்ச்சொற்களால் எளிய இனிய நடையுடன் இடையறாத தேனொழுக்கைப்போல ஒழுகிக்கொண்டிருக்கின்றன. கருத்துவளம் - கவிவளம் நிறைந்துள்ளன. இசைவாணர்கட்கு இசைவானது. திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்களுக்குக் காணிக்கையாக அளிக்கப்பெற்றது. அறிவுடைப்பெருமக்கள் பெற்று மகிழ்வார்களாக. விலை அணா 12. [கிடைக்குமிடம்.— வண்டமிழ்நிலையம், 57. வடக்காண்டார்வீதி, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி]

சாராவளி (சோதிட நூல்)

மனிதன்வாழ்வு முன்பிறவிகளில் செய்த புண்ணிய பாவங்கட்கு ஈடாக உருவாகிறது ஆனால் அவைகள் எந்தெந்தக்காலத்தில் சுக துக்க ரூபமாகவந்து பொருந்துகின்றன என அறிய நமக்குச் சோதிடத்தைத் தவிர வேறு துணையில்லை. சோதிடம் வடமொழியில் வேதத்திற்கு அங்கமாகப் பேசப்பட்டிருக்கின்றது. அவ்வளவும் தமிழில் வந்தால் சோதிடக்கலையும் தமிழ்மக்கள் உணர்ந்துகொள்ள ஏதுவாகும். அந்தத்துறையில் பறங்கிப்பேட்டை, பிரம்மஸ்ரீ சு. ஏ. குமாரசாமி ஆச்சாரியாரவர்கள் மிக நல்லவேலைசெய்துவருகிறார்கள். அவர்களால் வெளியிடப்பட்ட சோதிட நூல்கள் மிகப்பல. இப்போது சாராவளி வெளிவந்திருக்கிறது. நல்ல மொழிபெயர்ப்பு; விளக்கமான பதிப்பு; திருத்தமானமுறை; யாவரும் பயன்படுத்தக்கூடியது. விலை ரூபாய் பத்துதான். இத்தகைய கலைநூல்கள் மேல்நாட்டுமொழிகளில் வெளிவருமாயின் லட்சக்கணக்காக விற்பனையாகிக் கலைக்கும் கலைஞனுக்கும் பயன்படும். இந்நூல் விரைவில் விற்பனையாகுமானால் இனி வெளிவர இருக்கும் பல நூல்களுக்கும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். தமிழுலகம் அறிந்து பயன்படுத்த வேண்டும். [கிடைக்குமிடம்:— சு. ஏ. குமாரசாமி ஆச்சாரியார், 1. ஏகாம்பர ஆசாரி வீதி, பறங்கிப்பேட்டை.]

அற்புதத் தேவாரத்திரட்டு

பல்லாற்றானும் சமயப்பணிபுரிந்து வருகிறது காஞ்சிபுரம் கணபதி வாசகசாலை. கொல்லாவிரதம் குவலயமெல்லாம் ஓங்க வேண்டும் என்பதும் அப்பணியின் ஒருபகுதி. நூல்வெளியீட்டுப் பணியில் முதல்முதல் இந்தியாவில் ஆலயவழிகாட்டி என்ற நூலைப் பிரசுரித்தது. இரண்டாவதாகத் தொண்டைநாட்டிலுள்ள 32 திருத்தலங்களின் தேவாரங்களைத் தொகுத்துத் தந்தது மூன்றாவதாகக் காஞ்சிபுரத்திலுள்ள ஆலயங்களுக்கு விளக்கம் எழுதி உபகரித்தது. இப்போது அற்புதத்தேவாரங்களைத்தொகுத்து வெளியிட்டிருக்கிறது. மக்கள் பெற்றுப் பயன்பெறலாம். விலை அணா ஆறு. கிரௌன்சைஸ் 64 பக்கங்கள். [விலாசம்:— கணபதி வாசகசாலை, 92 காமாட்சி அம்மன்கோயில் தெரு, காஞ்சிபுரம்.]

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—6—1951.